بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6 | இதழ் 1

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

22 ஜமாதில் அவ்வல் 1442 ஹிஜ்ரி கமரி 07 ஸுலஹ் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி
தப்லீக் 7 ஜனவரி 2021


**அல்லாஹ்வின் கட்டளை**

مَنْ كَانَ يُرِيْدُ ثَوَابَ الدُّنْيَا
فَعِنْدَ اللّٰهِ ثَوَابُ الدُّنْيَا وَالْاٰخِرَةِ ؕ
وَكَانَ اللّٰهُ سَمِيْعًا بَصِيْرًا

இந்த உலகத்திற்குரிய கூலியினை விரும்புகின்றவர், அல்லாஹ்விடம் இந்த உலகத்திற்குரியதும், மறு உலகத்திற்குரியதுமான (இருவகை) கூலியும் உள்ளன (என்பதை நினைவில் கொள்ளட்டும்). அல்லாஹ் நன்கு கேட்பவனும், பார்ப்பனுமாவான்.
(4:135)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இன்றைய காலத்தின் ஆராய்ச்சிகளில் பிளேக் நோயின் வேர் புழுக்கள் அல்லது நுண்ணுயிரிகள் என்று நிரூபணமாகியுள்ளது. நானும் இந்த ஆராய்ச்சிகளை விரும்புகின்றேன். ஏனென்றால் அதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவம் மற்றும் இஸ்லாத்தின் உண்மைத்துவம் நிரூபணமாகின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

## நவீன ஆராய்ச்சிகள் இஸ்லாத்திற்கு வலுசேர்க்கின்றன

இன்றைய காலத்தின் ஆராய்ச்சிகளில் பிளேக் நோயின் வேர் புழுக்கள் அல்லது நுண்ணுயிரிகள் என்று நிரூபணமாகியுள்ளது. நானும் இந்த ஆராய்ச்சிகளை விரும்புகின்றேன். ஏனென்றால் அதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவம் மற்றும் இஸ்லாத்தின் உண்மைத்துவம் நிரூபணமாகின்றது.

ஹதீஸில் இந்த குறிப்பு இடம் பெற்றிருக்கின்ற இடத்தில் நகஃப் என்று அதற்கு பெயரிடப்பட்டுள்ளது. ஆடு மற்றும் ஒட்டகத்தின் மூக்கிலிருந்து வெளிப்படும் கிருமியை நகஃப் என்று கூறுவார்கள். மேலும் அதனை ப்ளேக் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய ஆராய்ச்சிகளின் மீது மிகவும் பெருமிதம் கொள்ளப்படுகிறது. ஆனால் எவர் இஸ்லாத்தின் தூய ஸ்தாபகரின் தூய கூற்றுகளை படித்துள்ளாரோ அவர் மிகுந்த இன்பமும், மகிழ்ச்சியும் அடைவார்.

1300 ஆண்டுகளுக்கு முன்பாகவே அன்னாரின் தூய உதடுகளிலிருந்து இந்த வார்த்தைகள் வெளிப்பட்டதை காணும்போது அவர் மகிழ்ச்சியடைவார். திருக்குர்ஆனும் கூட அதனை 'கிருமி' என்றே குறிப்பிட்டுள்ளது.

தற்போது நவீன ஆராய்ச்சிகளில் இறங்கியுள்ளவர்களே! இறைவனுக்காக சற்று நீதியுடன் செயல்படுங்கள். மேலும் எந்த மார்க்கம் 1300 வருட உழைப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு முன்பாகவே தனது உண்மையை தானே கொண்டுள்ளதோ அந்த மார்க்கம் மனித இட்டுக்கட்டாக இருக்க முடியுமா? என்பதை நீங்களே கூறுங்கள். இவை திருக்குர்ஆன் மற்றும் நமது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவார்ந்த அற்புதங்களாகும்.

பாருங்கள்! இதயத்திற்கு கல்ப் என்று கூறுவார்கள். மேலும் வலம் வருபவற்றிற்கும் கல்ப் என்று கூறுவார்கள். இதயம் இரத்த ஓட்டத்தின் அடிப்படையாக உள்ளது. இன்றைய கால ஆராய்ச்சிகள் ஒரு நீண்ட நெடிய உழைப்பு மற்றும் திட்டத்திற்கு பின்னர் இரத்த ஓட்டத்தின் விவகாரத்தை கண்டு பிடித்துள்ளது. ஆனால் இஸ்லாம் இதற்கு முன்பாகவே இதயத்திற்கு கல்ப் என்று பெயர் சூட்டி இந்த உண்மையை நிலைநாட்டி பாதுகாத்து விட்டது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 236,237 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆ நிகழ்த்திய அற்புதம்

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மக்களுக்கு வறட்சியின் துன்பம் ஏற்பட்டது. இதற்கிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளன்று குத்பா வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு கிராமவாசி எழுந்து நின்றார். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! விலங்குகள் மரணித்து விட்டன. மனைவி மக்கள் பட்டினியாக உள்ளனர். தாங்கள் அல்லாஹ்விடத்தில் எங்களுக்காக துஆ செய்யுங்கள் என்று வேண்டினார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரு கரங்களையும் உயர்த்தினார்கள். அப்போது வானத்தில் மேகத்தின் சிறு துண்டு கூட எங்களுக்கு தென்பட்டிருக்கவில்லை. எவனது கையில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவனின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தனது கரத்தை கீழே தாழ்த்தி கூட இருக்கவில்லை. அதற்குள் மேகங்கள் மலைகள் போல ஒன்றுகூடி விட்டன. மேலும் மழையின் துளிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாடியை நனைப்பதை நான் கண்டிராத வரை அன்னார் மேடையை விட்டு கீழே இறங்கவில்லை. சுருக்கமாக, அன்று நாள் முழுவதும் மழை பெய்து கொண்டே இருந்தது. மறுநாளும், அதற்கு அடுத்த நாளும், அதற்கு அடுத்த நாளும், எந்த அளவுக்கு என்றால் அடுத்த ஜுமுஆ நாள் வரை (மழை பெய்து கொண்டே இருந்தது.)

அறிவிப்பாளர் கூறுகின்றார்: பின்னர் அதே நபர் அல்லது வேறொரு நபர் எழுந்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கட்டடங்கள் இடிந்து விட்டன. விலங்குகள் மூழ்கி விட்டன. தாங்கள் எங்களுக்காக அல்லாஹ்விடத்தில் துஆ செய்யுங்கள் என்று வேண்டினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது கரங்களை உயர்த்தி, அல்லாஹ்வே! எங்களின் சுற்று வட்டாரத்திற்கு (செல்லட்டும்); எங்களுக்கு வேண்டாம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வானத்தின் எந்த திசையை நோக்கி சைகை செய்தாலும் அந்தப் பகுதி வெடித்தது. மேலும் மதீனா குளம் போன்று ஆகிவிட்டது. கனாத் என்ற ஓடை மாதம் முழுவதும் நிறைந்து ஓடிக் கொண்டிருந்தது. எந்தத் திசையிலிருந்து எவர் வந்தாலும் மழையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்.

(புகாரி தொகுதி 2 பாடம் அல் ஜுமுஆ, 2006 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபாக்களான ஹஸ்ரத் அவ்ஃப் பின் ஹாரிஸ் பின் ரிஃபாஆ அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் காலித் (அபூ அய்யூப்) அன்ஸாரி (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 நவம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **20 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் அவ்ஃப் பின் ஹாரிஸ் பின் ரிஃபா என்ற பெயருடைய சஹாபியின் நற்குறிப்பு இன்று முதலில் எடுத்துரைக்கப்படும். அறிவிப்புகளில் அன்னாரின் பெயர் அவ்ஃப் பின் அஃப்ரா பின் ஹாரிஸ் என்றும் அவ்ஸ் பின் அஃப்ரா என்றும் கூறப்பட்டுள்ளது. அஃப்ரா என்பது அன்னாரின் தாயாரின் பெயராகும். அன்னார் அன்ஸாரின் கோத்திரமான பனூ நஜ்ஜாரைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் மற்றும் ஹஸ்ரத் மவூஸ் இருவரும் ஹஸ்ரத் அவ்ஃப் அவர்களின் சகோதரர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்கள் மக்காவில் வந்து முதலில் பைஅத் செய்த ஆறு நபர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் பைஅத்தே உக்பாவிலும் பங்கு பெற்றிருந்தார்கள். அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது ஹஸ்ரத் அஸத் பின் ஸிராரா மற்றும் ஹஸ்ரத் அம்மாரா பின் ஹஸம் ஆகியோருடன் இணைந்து பனூ மாலிக் பின் நஜ்ஜாரின் சிலையை உடைத்தார்கள்.

பதர் போர் நாளின்போது போர் நடந்து கொண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் அவ்ஃப் பின் அஃப்ரா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தனது அடியாரின் எந்த விஷயத்தில் மிக அதிகமாக மகிழ்ச்சி அடைகின்றான் என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அடியானின் கரங்கள் போரில் மும்முரமாக இருக்கும்போது அவன் எவ்வித கவசமின்றியும், அச்சமின்றியும் போரிட்டுக் கொண்டிருக்கும்போது என்று கூறினார்கள். அதாவது போர் மைதானத்தில் இருக்கும்போது அச்சமற்றவராக இருக்க வேண்டும். அப்போது ஹஸ்ரத் அவ்ஃப் பின் அஃப்ரா தனது கவசத்தை கழற்றி விட்டார்கள். மேலும் முன்னோக்கி சென்று போரிட தொடங்கினார்கள். எந்த அளவுக்கு என்றால் ஷஹீதாகி விட்டார்கள்.

பதர் யுத்தத்தில் அபூஜஹில், அவ்ஃப் பின் ஹாரிஸ் மற்றும் அன்னாரின் சகோதரரான ஹஸ்ரத் மஅவ்வஸ் ஆகியோரை ஷஹீதாக்கி இருந்தான். ஹதீஸ் மற்றும் வாழ்க்கை வரலாற்று புத்தகங்களில் பதர் யுத்தத்தின்போது அபூஜஹில் மீது தாக்குதல் நடத்திய சஹாபாக்களின் பெயர்களும் கிடைக்கின்றன. அவர்களில் ஹஸ்ரத் அவ்ஃப் பின் அஃப்ரா அவர்களின் பெயரும் இடம் பெற்றுள்ளது. இதற்கு முன்னரும் நான் ஒரு முறை இதை குறிப்பிட்டிருக்கின்றேன்.

சுனன் அபீ தாவூது புத்தகத்தில் இவ்வாறு வந்துள்ளது: அன்னாரின் பெயர் அவ்ஃப் பின் ஹாரிஸ் ஆக இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 373–375 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பொதுவான வழக்கத்தில் இந்த இரண்டு பெயர்களாலும் அன்னார் அழைக்கப்பட்டார்கள். எவ்வாறிருப்பினும் அபூஜஹிலின் கொலையிலும் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள். பதர் போரில் அன்னாரின் ஷஹாதத் நிகழ்ந்தது.

அடுத்து இடம்பெற இருக்கும் சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) ஆகும். ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களின் பெயர் ஹஸ்ரத் காலித் ஆகும். மேலும் அன்னாரின் தந்தையார் பெயர் ஸைது பின் குலைப் ஆகும்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 22 ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் தனது பெயர் மற்றும் சுட்டுப்பெயர் இரண்டு விஷயங்களாலும் பிரபல்யமாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களின் தொடர்பு அன்ஸார் கோத்திரமான கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளை கோத்திரமான பனூ நஜ்ஜாரைச் சார்ந்ததாக இருந்தது. ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களுக்கு பைஅத்தே அக்பா சானியா சந்தர்ப்பத்தில் 70 அன்ஸாருடன் பைஅத் செய்வதற்கு நற்பாக்கியம் கிடைத்திருந்தது. ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களின் தாயார் பெயர் ஹிந்த் பின்த் ஸைத் ஆகும்.

மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் அன்னாரின் பெயர் ஸுஹ்ரா பின்த் சஅத் ஆக இருந்தது. ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களின் மனைவியின் பெயர் ஹஸ்ரத் உம்மே ஹஸன் பின்த் ஸைத் ஆகும். அன்னாரின் மூலம் அப்துர் ரஹ்மான் என்ற ஒரு மகன் பிறந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) மற்றும் ஹஸ்ரத் முஅஸ்ஸப் பின் உமைர் ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தியிருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 368–369 ஹஸ்ரத் அபூ அய்யூப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வருகை தந்தபோது அன்னார் மஸ்ஜிது நபவி மற்றும் தமது வீட்டின் கட்டுமான பணி முடியும் வரை ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) என்ற சஹாபியின் வீட்டிலேயே தங்கியிருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 23 ஹஸ்ரத் அபூ அய்யூப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இதனை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்: பனூ நஜ்ஜாரை சென்றடைந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாருடைய வீட்டில் விருந்தினராக தங்குவார்கள் என்ற கேள்வி முன்னெழுந்தது. அந்த பெருமை தமக்கே கிடைக்க வேண்டும் என்று கோத்திரத்தின் ஒவ்வொரு நபரும் ஆசைப்பட்டார். சிலர் மகிழ்ச்சியில் அன்னாரின் ஒட்டகத்தின் கடிவாளத்தையே பிடிக்கத் தொடங்கி விட்டார்கள். இந்த நிலையைக் கண்ட பிறகு எனது ஒட்டகத்தை விட்டு விடுங்கள். இது தற்போது இறைவனால் அனுப்பப்பட்டுள்ளது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது இறைவனுடைய விருப்பம் எங்கு இருக்குமோ அங்கு இந்த ஒட்டகம் சுயமாகவே அமர்ந்து விடும். இவ்வாறு கூறிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கடிவாளத்தை இலகுவாக்கி விட்டு விட்டார்கள். ஒட்டகம் முன்னேறிச் சென்றது. சிறிது தூரம் மெதுமெதுவாக சென்றது. பின்னர் ஓரிடத்தை அடைந்தது. அந்த இடத்திற்குப் பிறகு மஸ்ஜிது நபவி மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறைகள் தயாராகிக் கொண்டிருந்தன. அப்போது மதீனாவின் இரண்டு பிள்ளைகளுக்குரிய நிலம் இருந்தது. அங்கு ஒட்டகம் அமர்ந்து விட்டது. ஆனால் பின்னர் உடனே அது எழுந்தது. மீண்டும் முன்னோக்கி செல்லத் தொடங்கியது. ஆனால் சிறிது தூரம் சென்றதும் மீண்டும் திரும்பி வந்தது. மேலும் எங்கு முதலில் அமர்ந்திருந்ததோ அங்கேயே மீண்டும் அமர்ந்து கொண்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், هٰذَا اِنْ شَاءَ اللّٰهُ الْمَنْزِلُ அதாவது இறைவனின் பார்வையில் இதுவே நமது தங்குமிடமாகும் என்பது தெரிய வருகிறது என்று கூறினார்கள். பின்னர் இறைவனிடத்தில் துஆ செய்தவாறு ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கினார்கள். பின்னர் உங்களது நபர்களில் அதாவது முஸ்லிம்களில் இங்கு மிகவும் அருகில் யாருடைய வீடு உள்ளது? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் உடனடியாக லெப்பைக் என்று கூறியவாறு முன்னால் வந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது எனது வீட்டின் கதவாகும் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நல்லது! உள்ளே செல்லுங்கள். சென்று நாம் தங்குவதற்கு எமக்கான இடத்தை ஆயத்தம் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் உடனடியாக தனது வீட்டை சரி செய்து விட்டு திரும்பி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருடன் உள்ளே சென்றார்கள். இந்த வீடு இரண்டு அடுக்கு கட்டடமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வீட்டின் மேற்புறத்தில் தங்க வேண்டும் என அபூ அய்யூப் அவர்கள் விரும்பினார்கள். ஆனால் தன்னை சந்திக்க வருபவர்களுக்கு இலகுவாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு கீழ் தளத்தையே அன்னார் விரும்பினார்கள். மேலும் அங்கேயே தங்கி விட்டார்கள். இரவு ஆனது. இரவில் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் மற்றும் அன்னாருடைய மனைவி ஆகிய இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழே இருக்கின்றார்கள். நாம் மேலே இருக்கின்றோமே என்ற எண்ணத்தில் இரவு முழுவதும் தூங்கவில்லை.

அதுமட்டுமல்ல தற்செயலாக நிகழ்ந்த விஷயம் என்னவென்றால், இரவில் முதல் தளத்தில் தண்ணீர் பாத்திரம் ஒன்றும் உடைந்து போனது. ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் தண்ணீரின் ஏதாவதொரு துளி கீழே விழுந்து விடக்கூடாது என்பதற்காக உடனடியாக தனது ஆடையை தண்ணீரின் மீது போட்டு அதை உலர வைத்து விட்டார்கள்.

காலை விடிந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் தாங்கள் மேலே செல்ல வேண்டும் என்று அன்னார் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் தாமதித்தார்கள். ஆனால் இறுதியில் அன்னாரின் பிடிவாதத்தைப் பார்த்து சம்மதித்து விட்டார்கள். அந்த வீட்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏழு மாதங்கள் வரை தங்கினார்கள். அல்லது இப்னு இஸ்ஹாக்கின் அறிவிப்பின் அடிப்படையில், ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் வரை அன்னார் அங்கு தங்கினார்கள்.ஆக மஸ்ஜிது நபவி மற்றும் அதைச் சுற்றி அறைகள் தயாராகாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) என்ற சஹாபியின் வீட்டிலேயே தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக உணவு அனுப்பி வைப்பார்கள்.திருப்பி அனுப்பப்படும் எஞ்சிய உணவை அன்னார் உண்டு வந்தார்கள். அன்பு மற்றும் கலப்பற்றத்தன்மையின் காரணமாக எந்த இடத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணவு உண்டிருந்தார்களோ அதே இடத்தில் விரல்களை வைத்து ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் சாப்பிட்டு வந்தார்கள். மற்றொரு சஹாபியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உணவு அனுப்பி வந்தார்கள்.

(நூல்:சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 267,268)

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள். சில வாக்கியங்களும், சில விஷயங்களும் புதிதாக உள்ளன. எனவே நான் இவை அனைத்தையும் வாசித்து விடுகின்றேன். பொதுவாக இது அதே சம்பவம்தான். ஆயினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கென்று விஷயங்களை எடுத்துரைப்பதற்கு ஒரு தனி நடைமுறை உள்ளது.

அன்னார் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் தங்க வேண்டும் என அனைவரும் விரும்பினார்கள். எந்த எந்த வீதிகளிலெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகம் கடந்து சென்றதோ அந்த வீதியின் குடும்பத்தைச் சார்ந்த நபர்கள் தனது வீடுகளுக்கு முன்னால் வந்து நின்று கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வரவேற்றார்கள்.

மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது எம்முடைய செல்வமாகும். இது எம்முடைய உயிராகும். நீங்கள் எந்த தொண்டிற்காக அழைத்தாலும் உங்களுக்கு தொண்டாற்றுவதற்காக நாங்கள் எப்போதும் ஆயத்தமாக இருக்கின்றோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் உங்களை பாதுகாக்க தகுதியானவர்களாக இருக்கின்றோம். தாங்கள் எங்களிடமே தங்கி விடுங்கள் என்று அவர்கள் கூறினர்.

சில மக்கள் உணர்வில் இன்னும் முன்னேறினார்கள். அன்னாரின் ஒட்டகத்தின் கடிவாளத்தை பிடித்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தனது வீட்டில் இறக்கி விட வேண்டுமென்று அவர்கள் விரும்பினர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது ஒட்டகத்தை விட்டு விடுங்கள். இது இன்று அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ளது. இறைவனுடைய விருப்பம் எங்கு இருக்குமோ அங்கேயே இது நிற்கும் என்று ஒவ்வொரு நபரிடமும் கூறி வந்தார்கள்.

இறுதியில் மதீனாவின் ஒரு ஓரத்தில் பனூ நஜ்ஜாரைச் சார்ந்த அனாதைகளுக்குரிய ஒரு நிலத்திற்கு அருகில் சென்று ஒட்டகம் நின்றுவிட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாம் இங்கு தங்குவதே இறைவனின் விருப்பமாக தெரிய வருகின்றது என்று கூறினார்கள். பின்னர் இது யாருடைய இடம்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அந்த இடம் சில அனாதைகளுக்குரியதாக இருந்தது. அதன் பாராமரிப்பாளர் முன்னால் சென்றார். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது இன்ன இன்ன அனாதைகளுக்குரிய இடமாகும். மேலும் உங்களுக்கு தொண்டாற்ற தயாராக உள்ளது என்று கூறினார்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாம் எவருடைய செல்வத்தையும் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியாது என்று கூறினார்கள். இறுதியில் அதற்கு விலை நிர்ணயிக்கப்பட்டது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இடத்தில் பள்ளிவாசல் மற்றும் தமக்குரிய வீடுகளை கட்டிக் கொள்ள தீர்மானித்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இங்கு மிக அருகில் யாருடைய வீடு உள்ளது என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் முன்னால் வந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது வீடுதான் மிக அருகில் உள்ளது என்று கூறினார்கள். மேலும் உங்களுக்காக அது சமர்ப்பிக்கப்படுகிறது என்றும் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் (உங்களது) வீட்டிற்கு சென்று எமக்காக ஏதாவதொரு அறையை தயார் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களின் வீடு இரண்டு அடுக்கு கொண்டதாக இருந்தது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக மேல் தளத்தை ஒதுக்கினார்கள். ஆனால் தன்னை சந்திக்க வருபவர்களுக்கு கஷ்டம் ஏற்படும் என்ற எண்ணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழ் தளத்தையே தேர்ந்தெடுத்தார்கள். அன்ஸாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருந்த அதிகமான நேசம் இந்த சந்தர்ப்பத்தில் வெளிப்பட்டது என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்.

அன்னார் (ஸல்) அவர்கள் கூறியதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழ் தளத்தில் தங்குவதை ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தாலும் முழு இரவும் கணவரும் மனைவியும் இந்த எண்ணத்தில் கண் விழித்துக் கொண்டிருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழ் தளத்தில் உறங்குகின்றார்கள். ஆனால் நாமோ மேல் தளத்தில் உறங்குகின்றோம். இது மரியாதைக் குறைவாக ஆகிவிடுமே என்ற எண்ணத்தில் அவர்கள் தூங்காமல் இருந்தனர். இது அன்பின் ஒரு வெளிப்பாடாகும்.

இரவில் தண்ணீர் பாத்திரம் ஒன்று கீழே விழுந்தது. கீழ் தளத்தில் தண்ணீர் வடிந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் ஓடிச் சென்று தனது ஆடையை தண்ணீரில் நனைத்து அதன் ஈரப்பதத்தை உலரச் செய்து விட்டார்கள். காலைப்பொழுதில் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். அனைத்து நிலைமைகளையும் எடுத்துரைத்தார்கள். அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேல் தளத்திற்கு செல்வதற்கு சம்மதித்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் தினமும் உணவை ஆயத்தப்படுத்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அனுப்பி வைப்பார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து எஞ்சிய உணவு திரும்பும்போது அதிலிருந்து முழு குடும்பமும் உண்டு வந்தது. சில நாட்களுக்குப் பிறகு மற்ற சஹாபாக்களும் விருந்து உபசரிப்பில் தங்களுக்கும் பங்கு இருப்பதாக உரிமை கோரினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கென சொந்த வீட்டிற்கான ஏற்பாடு ஆகிவிடாத வரை மதீனாவின் முஸ்லிம்கள் அன்னாருக்கு உணவை கொண்டு வந்து கொடுத்து வந்தார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 228,229)

ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருடைய வீட்டிற்கு வருகை தந்தார்கள். இது ஹதீஸில் இடம் பெற்றிருக்கின்ற எஞ்சிய விஷயங்களாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய விஷயங்கள் முடிந்து விட்டன.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருடைய வீட்டிற்கு வருகை தந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டின் கீழ் தளத்திலும், அபூ அய்யூப் அன்ஸாரி அவர்கள் வீட்டின் மேல் தளத்திலும் தங்கினார்கள். ஒரு நாள் இரவு ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் கண் விழித்தார்கள். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைக்கு மேலே அமர்ந்திருக்கின்றோம் என்று கூறினார்கள். எனவே அவர்கள் ஒரு பக்கமாக விலகி விட்டார்கள். மேலும் வீட்டின் ஒரு மூலையில் இரவை கழித்தார்கள். பின்னர் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கீழ் தளத்தில் அதிக வசதி உள்ளது. அப்போது எந்த வீட்டின் கீழ் தளத்தில் நீங்கள் இருக்கின்றீர்களோ அதன் மேல் தளத்தில் என்னால் இருக்க முடியாது என்று ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேல் தளத்திற்கு இடம் பெயர்ந்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் கீழ் தளத்திற்கு வந்து விட்டார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக உணவை ஆயத்தப்படுத்தி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அந்த உணவு திரும்பி வந்தபோது உணவை கொண்டு வருபவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விரல் எந்த இடத்தில் பட்டது என்று கேட்பார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விரல் பட்ட இடத்திலிருந்து உணவை எடுத்து உண்பார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணவு உண்ட இடத்திலிருந்து அன்னார் உணவு உண்பார்கள்.

அன்னார் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக உணவு ஆயத்தம் செய்தார்கள். அதில் பூண்டு இருந்தது. அந்த உணவு அவர்களிடத்தில் திருப்பி கொண்டு வரப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விரல் எந்த இடத்தில் பட்டது என்று அன்னார் கேட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை உண்ணவில்லையா? என்றும் கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணவு உண்ணவில்லை என்று கூறப்பட்டபோது அன்னார் பதற்றமடைந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். இந்த பூண்டு ஹராமா? என்று அன்னார் வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை! ஆனால் நான் அதனை விரும்பவில்லை என்று கூறினார்கள். அப்போது எதனை நீங்கள் விரும்பவில்லையோ அதனை நானும் விரும்பவில்லை என்று ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் மலக்குகள் வந்து கொண்டிருந்தார்கள். இது முஸ்லிமின் அறிவிப்பாகும். அதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது வஹீ வரும்போது மலக்குகள் வந்து விடுவார்கள். அதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாற்றம் கொண்ட பொருட்களை விரும்பியதில்லை. ஆயினும் அது ஹராமானது அல்ல.

முஸ்லிமில் இந்த அறிவிப்பு இவ்வாறு இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உணவு பரிமாறப்படும்போது அன்னார் அதிலிருந்து உணவு உண்பார்கள். மேலும் அதில் எஞ்சிய உணவை எனக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். ஒரு நாள் அன்னார் உணவை திருப்பி அனுப்பி வைத்தார்கள். அதிலிருந்து அன்னார் எதனையும் உண்ணவில்லை. ஏனென்றால் அதில் பூண்டு இருந்தது. இது ஹராமா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை! ஆயினும் அதனை நான் விரும்பவில்லை என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள், எதனை தாங்கள் விரும்பவில்லையோ அதனை நானும் விரும்ப மாட்டேன் என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்... ஹதீஸ் எண் 5356–5358)

மற்றோர் அறிவிப்பு இது முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலில் இடம் பெற்றுள்ளது. இந்த சம்பவம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களது வீட்டின் கீழ் தளத்தில் தங்கியிருந்தார்கள். மேலும் நான் மேல் தளத்தில் தங்கி இருந்தேன். ஒரு முறை மேல் தளத்தில் தண்ணீர் வடிந்தது. அப்போது நானும் உம்மே அய்யூப் அவர்களும் சேர்ந்து ஒரு துணியால் தண்ணீரை உலரச் செய்தோம். அந்த தண்ணீர் ஒழுகி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பட்டுவிடக்கூடாதே என்பதற்காக அவ்வாறு செய்தோம். பின்னர் நான் அச்சமடைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றேன்.

மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் மேலே தங்குவதை விரும்பவில்லை என்று கூறினேன். அதன் பிறகு அன்னார் மேல் தளத்திற்கு இடம் பெயர்ந்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப அன்னாரது பொருட்கள் மேல் தளத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டன. அன்னாரின் பொருட்கள் மிக குறைவாகவே இருந்தன. பின்னர் நான் கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் உணவை எனக்கு திருப்பி அனுப்பும்போது நான் ஆய்வு செய்வதுண்டு. உங்களின் விரல்களின் அடையாளம் எங்கு இருப்பதாக நான் காண்பேனோ நான் எனது கையை அதிலேயே வைப்பேன். ஆனால் இன்று நீங்கள் எனக்கு உணவு அனுப்பியுள்ளீர்கள். நான் அவ்வாறே ஆய்வு செய்தபோது உங்களின் விரல்களின் அடையாளத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது சரியான விஷயம்தான் என்று கூறினார்கள்.

தொடர்ந்து கூறினார்கள்: விஷயம் என்னவென்றால், இதில் வெங்காயம் இருந்தது. இந்த அறிவிப்பில் பூண்டிற்கு பதிலாக வெங்காயம் என்று கூறப்பட்டுள்ளது. என்னிடத்தில் வருகின்ற அந்த வானவரின் காரணமாக நான் அதை உண்ண விரும்பவில்லை. ஆயினும் நீங்கள் அதனை உண்ணுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 781 ஹதீஸ் எண் 23966 முஸ்னத் அபூ அய்யூப் அன்ஸாரி – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பதர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் பங்கு பெறும் நற்பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 3 பக்கம் 369 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் பதர் போர் நாளன்று வரிசைகளில் நின்றோம். அப்போது எங்களில் சிலர் வரிசைகளிலிருந்து முன்னால் சென்று விட்டார்கள். அவர்களை பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், என்னுடன்; என்னுடன் என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 780 முஸ்னத் அபூ அய்யூப் அன்ஸாரி, ஹதீஸ் எண் 23963 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது எனக்குப் பின்னால் நில்லுங்கள். என்னை முந்தாதீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸஃப்யா அவர்களின் திருமண நாள் அன்று இரவில் நடந்த சம்பவமாகும். இதுவும் இதற்கு முன்பு ஓரிடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டிருந்தபோதிலும் நான் மீண்டும் அதனை கூறி விடுகின்றேன். ஹஸ்ரத் ஸஃப்யா அவர்களின் திருமண நாள் அன்று ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூடாரத்திற்கு வெளியே வாளை ஏந்திக் கொண்டு இரவு முழுவதும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டார்கள். கூடாரத்தின் நான்கு பக்கமும் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

காலை விடிந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களை கூடாரத்திற்கு வெளியே நிற்பதை கண்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ அய்யூபே! என்ன விஷயம்? என்று கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் ஒரு பெண்மணியைக் குறித்து அச்சத்திற்கு ஆளாகியுள்ளேன். ஏனென்றால் அவரது தந்தையும், அவரது கணவரும், அவரது சமுதாயமும் கொல்லப்பட்டு விட்டனர். இப்போதுதான் இந்த பெண்மணி நிராகரிப்பிலிருந்து வெளியேறி இருக்கின்றார். எனவே நான் இரவு முழுவதும் தங்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பணி செய்து கொண்டிருந்தேன் என்று கூறினார்கள்..

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், اَللّٰهُمَّ احْفَظْ اَبَا اَيُّوْبَ كَمَا بَاتَ يَحْفَظُنِيْ அதாவது அல்லாஹ்வே! அபூ அய்யூபிற்கு பாதுகாப்பு அளிப்பீராக. எவ்வாறு அவர் இரவு முழுவதும் எனது பாதுகாப்பில் இரவை கழித்தாரோ அதுபோன்று நீ அவரை பாதுகாப்பாயாக என்று கூறினார்கள்.

இமாம் சுஹைலீ அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த துஆவிற்கேற்ப ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களுக்கு பாதுகாப்பை வழங்கி வந்தான். எந்த அளவுக்கு என்றால் ரோமானியர்கள் அன்னாரின் கபரை பாதுகாத்து வந்தார்கள். அவர்கள் அதனை ஊடகமாகக் கொண்டு அல்லாஹ்விடத்தில் தண்ணீர் வேண்டி வந்தார்கள். அப்போது அவர்களுக்கு மழையும் பெய்து வந்தது.

(அஸ்ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 65, கஸ்வா கைபர் – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஹ்மூது கூறுகின்றார்கள்: அன்னார் உத்பா பின் மாலிக் (ரலி) அவர்களிடமிருந்து கேட்டார்கள். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பதர் போரில் கலந்து கொண்ட நபர்களில் ஒருவராக இருந்தார். அவர் கூறி வந்தார். நான் எனது சமுதாயமான பனூ சாலிமிற்கு தொழுகை நடத்தி வந்தேன். எனக்கும் அவர்களுக்குமிடையில் ஒரு ஓடை இருந்தது. மழை பொழியும்போது பள்ளிவாசலை நோக்கி அவர்களிடத்தில் செல்வது எனக்கு கடினமானதாக இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்றடைந்தேன். மேலும் நான் எனது கண் பார்வையை பலவீனமானதாக கருதுகிறேன். எனக்கும் எனது சமுதாயத்திற்குமிடையில் ஓடை ஒன்று உள்ளது. மழை வரும்போது அது ஓடத் தொடங்கி விடுகின்றது. அதனை தாண்டி வருவது எனக்கு கஷ்டமாக உள்ளது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது வீட்டிற்கு வருகை தர வேண்டும். மேலும் வீட்டின் ஒரு பகுதியில் தொழுகை நடத்த வேண்டும். நான் அதனை எனது தொழுகைக்கான இடமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்தேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் வருகின்றேன் என்று கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மாலைப்பொழுதில் கடைசி நேரத்தில் என்னிடத்தில் வருகை தந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளே வர அனுமதி வேண்டினார்கள். நானும் அனுமதி வழங்கினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமரவில்லை. தொழுவதற்கான இடமாக நீங்கள் எதனை விரும்புகின்றீர்கள் என்று கேட்டார்கள். அதாவது நான் எங்கு தொழ வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள் என்று கேட்டார்கள். அப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஓரிடத்தை சைகை செய்து காட்டினேன். அந்த இடத்தில் அன்னார் தொழுகை நடத்த வேண்டும் என்பது எனது ஆசையாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அணிவகுத்து நின்றோம். அன்னார் இரண்டு ரக்அத்துகள் தொழ வைத்தார்கள். பின்னர் ஸலாம் கொடுத்தார்கள். எப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸலாம் கொடுத்தார்களோ நாங்களும் அப்போதுதான் ஸலாம் கொடுத்தோம். பின்னர் நாங்கள் ஹஸீரா என்ற கோதுமையும், ரொட்டியும் கலந்த ஒரு உணவை கொடுத்தோம் என்பதை முஹல்லாவாசிகள் அறிந்தனர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

மார்க்கத்தைப் பொய்ப்படுத்துபவனை நீர் அறிந்து கொண்டீரா? அவனே அநாதையை விரட்டுகிறான். மேலும் ஏழைகளுக்கு உணவளிக்குமாறு அவன் தூண்டுவதில்லை. (107:2–5)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது வீட்டில் இருக்கின்றார்கள் என்பதை முஹல்லாவாசிகள் அறிந்தனர். எனவே அவர்களில் சிலர் ஓடி வந்தனர். எந்த அளவுக்கு என்றால் வீடு அதிகமான ஆட்களால் நிரம்பி விட்டது. அவர்களில் ஒருவர், மாலிக் எங்கே? என்று கேட்டார். என்னால் அவரை பார்க்க முடியவில்லையே என்று கூறியபோது, அவர் முனாஃபிக் ஆவார் என்று ஒருவர் கூறினார். மற்றும் ஒரு சஹாபி குறித்து அவர் எங்கே என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் முனாஃபிக் ஆவார், அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது அவருக்கு எந்த நேசமும் இல்லை. எனவேதான் அவர் வரவில்லை என்று அவர்கள் கூறினர்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவ்வாறு கூறாதீர்கள் என்று கூறினார்கள். அவர் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறியிருப்பதை நீர் அறியவில்லையா? அவர் இவ்வாறு ஒப்புக் கொண்டதன் மூலம் அல்லாஹ்வின் திருப்தியை அவர் விரும்புகின்றார் என்று கூறினார்கள். அப்போது அந்த நபர், அல்லாஹ்வும் அவனது தூதரும் நன்கு அறிவார்கள். இறைவன் மீது ஆணையாக! அவனது நட்பும் அவரது பேச்சுக்களும் நயவஞ்சகர்களைச் சார்ந்ததாக இருப்பதாகவே நாங்கள் காண்கின்றோம் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவர் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்பதை ஒப்புக் கொள்வாரோ அவருக்கு அல்லாஹ் நெருப்பை ஹராமாக்கி இருக்கின்றான். அதன் மூலம் அவர் அல்லாஹ்வின் திருப்தியை விரும்பக்கூடியவராக இருக்கின்றார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஹ்மூது பின் ரபீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் இந்த விஷயத்தை வேறு சில மக்களிடமும் எடுத்துக் கூறினேன். அவர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழரான ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். அன்னார் ரோமானிய நாட்டில் மரணமடைந்தார்கள். அந்த போரில் அவர்கள் பங்கு பெற்றார்கள். மேலும் யஸீத் பின் முஆவிய்யா அன்னாரின் தலைவராக இருந்தார். ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் எனது கூற்றை மறுத்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறி விட்டார்கள் என்பதை நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கூறினார். அதாவது எவர் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று மட்டும் கூறுவாரோ அவர் மீது நெருப்பு ஹராமாகி விட்டது என்று நீர் கூறும் இந்த விஷயத்தை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் அறிவிப்பாளர் கூறுகின்றார்: எனக்கு இந்த விஷயம் மிகவும் கடினமாக இருந்தது. நான் மிகவும் துன்பத்திற்கு உள்ளானேன். நான் அல்லாஹ்விடத்தில் ஒரு வேண்டுதல் செய்தேன். அதாவது அல்லாஹ் என்னை பாதுகாப்பாக வைத்தால் இந்த போரிலிருந்து நான் திரும்பிச் சென்று ஹஸ்ரத் இத்பான் பின் மாலிக் (ரலி) அவர்களிடம் கேட்பேன். நிபந்தனை என்னவென்றால், நான் அன்னாரை அவரின் சமுதாயத்தின் பள்ளிவாசலில் உயிருடன் பார்க்க வேண்டும். எனவே நான் திரும்பிச் சென்றேன். ஹஜ் அல்லது உம்ராவிற்கான இஹ்ராம் அணிந்தேன். பின்னர் புறப்பட்டேன். எந்த அளவுக்கு என்றால் மதீனா சென்றடைந்தேன். மேலும் பனூ ஸாலிமின் வீதிக்கு சென்றேன். அப்போது ஹஸ்ரத் இத்பான் (ரலி) அவர்கள் முதுமையடைந்திருந்ததையும், அன்னாரின் பார்வை குறைந்து வந்ததையும் மேலும் அன்னார் தனது சமுதாயத்திற்கு தொழுகை நடத்திக் கொண்டிருப்பதையும் நான் பார்த்தேன். தொழுகை முடிந்த பிறகு அன்னார் ஸலாம் கொடுத்தார்கள். நான் அன்னாருக்கு சலாம் கூறினேன். மேலும் நான் யார் என்பதை அவரிடம் கூறினேன். பின்னர் நான் அந்த விஷயத்தைப் பற்றி கேட்டேன். அப்போது முதல் முறை அன்னார் என்னிடம் கூறிய அதே விஷயத்தை அப்படியே கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுத் தஹஜ்ஜுத்... ஹதீஸ் எண் 1186)

ஆம் இது சரிதான். எவர் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று கூறுவாரோ அவர் மீது நெருப்பு ஹராமாகும் என்ற விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன் என்று கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் தனது கருத்தாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

مَنْ قَالَ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ يَبْتَغِيْ بِذٰلِكَ وَجْهَ اللّٰهِ என்றே ஹதீஸில் வந்துள்ளது.

அதாவது எவர் இறைவனின் திருப்தியை பெற வேண்டும் என்பதற்காக لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று கூறுவாரோ என்றே ஹதீஸில் வந்துள்ளது. ஹதீஸின் மொழியாக்கத்தை முழுமையாக நான் படிக்கின்றேன். அதில் விளக்கமும் வந்துவிடும். மஹ்மூது பின் ரபீ அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் இத்பான் பின் மாலிக் (ரலி) அவர்களிடமிருந்து இவ்வாறு கேட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எவர் உண்மையான நிய்யத்துடன் இறைவனுடைய திருப்திக்காக لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்ற கலிமாவை ஒப்புக் கொள்வாரோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபர் மீதும் நெருப்பு ஹராமாக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் இந்த அறிவிப்பை ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் இருந்த ஒரு சபையில் எடுத்துரைத்தபோது ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் இந்த அறிவிப்பை மறுத்து விட்டார்கள். மேலும் இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த கூற்றை கூறியிருப்பார்கள் என்பதை என்னால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறினார்கள்.

தொடர்ந்து எழுதுகின்றார்கள்: இந்த ஹதீஸ் ரிவாயத்தின் விதிமுறைகளின் அடிப்படையில் சரியானதாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் தராயத் மற்றும் தனது புரிதலின் அடிப்படையில் அதனை ஒப்புக் கொள்ள மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களின் நிலைப்பாடு சரியில்லாமல் இருக்கலாம். ஆனால் எவ்வாறிருப்பினும் இந்த ஹதீஸ் இந்த விஷயத்தை உறுதிப்படுத்துகின்றது. அதாவது சஹாபாக்கள் ஒவ்வொரு விஷயத்தையும் மேம்போக்காக ஒப்புக் கொள்ளவில்லை. மாறாக, அதனை அவர்கள் சீர்தூக்கி பார்த்து வந்தனர். ஆராய்ந்து வந்தனர்.

எவ்வாறிருப்பினும் அன்னார் எழுதுகின்றார்கள்: சஹாபாக்கள் மேம்போக்காக எல்லா அறிவிப்புகளையும் ஒப்புக் கொள்ளவில்லை என்பது இந்த ஹதீஸிலிருந்து தெரிய வருகின்றது. மாறாக, தராயத் மற்றும் ரிவாயத் இரண்டு அம்சங்களின் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு முழுமையாக ஆய்வு செய்த பிறகுதான் ஒப்புக் கொண்டார்கள்.

(நூல்:சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 16)

புகாரியின் இந்த ஹதீஸின் விளக்கவுரையாக ஹஸ்ரத் செய்யது வலியுல்லாஹ் ஷா சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் மஹ்மூத் பின் ரபீ அவர்களிடமிருந்து அன்னார் அதாவது அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் இந்த அறிவிப்பை செவிமடுத்தபோது அவர்கள் இந்த அறிவிப்பை மறுத்து விட்டார்கள். சிலரைப் பொருத்தவரை அன்னார் அதனை ஏற்க மறுத்ததன் காரணம் இதுவாகும். அதாவது நற்செயல்கள் எதுவும் இல்லாமல் வெறும் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று ஒப்புக் கொள்வதால் மட்டும் நெருப்பிலிருந்து பாதுகாப்பாக இருந்துவிட முடியாது. இது நிரூபிக்கப்பட்ட இஸ்லாமிய விவகாரமாகும். இது சரிதான். இவ்வாறுதான் முற்றிலும் நடைபெறுகின்றது. ஆனால் தொடர்ந்து ஷா சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஆனால் يَبْتَغِيْ بِذٰلِكَ وَجْهَ اللّٰهِ என்ற வாக்கியம் இதை தெளிவுபடுத்துகின்றது. அதாவது இந்த ஏகத்துவ ஒப்புதல் எத்தகையது என்பதை எடுத்துரைக்கிறது. அதாவது உள்ளத்தால் இறை திருப்தியை விரும்பியவாறு இறைவனுக்காக எவர் கலிமா கூறுவாரோ, لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று கூறுவாரோ அவருக்கு நெருப்பு ஹராமாகி விடும்.

ஹஸ்ரத் ஸய்யிது வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் மஹ்மூத் மீண்டும் இந்த எண்ணத்துடன் ஆய்வு செய்தார்கள். அப்போது நிரூபணமானது என்னவென்றால், அந்த அறிவிப்பின் சொற்கள் முற்றிலும் சரியானதாகும். பின்னர் எழுதுகின்றார்கள்: ஒவருடைய ஈமான் அல்லது நயவஞ்சகம் பற்றி மக்களுக்கு முன்னால் கருத்துக் கூறுவது உகந்ததல்ல. அதாவது ஒருவரை முனாஃபிக் என்றோ அல்லது ஒருவரது ஈமான் பலவீனமானதாக உள்ளது என்றோ கூறுவது தவறான விஷயமாகும். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் இப்னு துஹ்ஷம் பற்றி குறை கூறியதை விரும்பவில்லை. இவ்வாறு பொது இடத்தில் கூறுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. வெறுத்தார்கள். இதுபோன்ற குற்றச்சாட்டுகள் சீர்திருத்தத்திற்கு பகரமாக குழப்பத்திற்கு காரணியாகி விடும்.

(ஸஹீஹுல் புகாரி, கிதாபுத் தஹஜ்ஜுத்... ஹதீஸ் எண் 1186 தொகுதி 2 பக்கம் 565 – ரப்வாவிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் மற்றும் ஹஸ்ரத் மிஸ்வர் பின் முஹ்ரமா ஆகியோர் அப்வா என்ற இடத்தில் குளிப்பது தொடர்பான விவகாரத்தில் கருத்து வேறுபாடு கொண்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அவர்கள் முஹ்ரிம் தனது தலையை நனைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் மிஸ்வர் அவர்கள் முஹ்ரம் தனது தலையை அலசக் கூடாது என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அவர்கள் என்னை ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அன்னார் இரண்டு மரக்கட்டைகளுக்கிடையில் குளிப்பதை கண்டேன். அவர்கள் துணியால் திரையிடப்பட்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். அப்போது யார்? என்று அவர்கள் கேட்டார்கள். நான் அப்துல்லாஹ் பின் ஹுனைன் என்று கூறினேன். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அவர்கள் உங்களிடம் என்னை அனுப்பி வைத்துள்ளார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இஹ்ராமின்

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் வரும்பொழுது, மேலும் அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக இணைவதை நீர் காணும்பொழுது, நீர் உமது இறைவனைப் புகழ்ந்து, அவனது தூய்மையினை எடுத்துரைத்து, அவனுடைய மன்னிப்பைத் தேடுவீராக. நிச்சயமாக அவன் தொடர்ந்து கருணை காட்டுபவனாவான். (110:2–4)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

நிலையில் இருந்தபோது எவ்வாறு தமது தலையை கழுவினார்கள்? என்று வினவி வருவமாறு என்னை அன்னார் அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறினேன். ஏனென்றால் இஹ்ராம் அணிந்திருந்தால் தலையை கழுவக்கூடாது என்று கூறுகின்றனர்.

அப்போது ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் தனது கையை துணியில் வைத்தார்கள். பின்னர் கீழே குனிந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்களின் தலை எனக்கு தென்பட்டது. அதாவது அன்னார் திரைக்கு பின்னால் இருந்தார்கள். திரையை அகற்றி விட்டு தனது தலையை காட்டினார்கள். பின்னர் அன்னார் மீது தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த ஒரு மனிதரிடம் தண்ணீரை ஊற்றுங்கள் என்று அன்னார் கூறினார்கள். அந்த மனிதரும் தண்ணீர் ஊற்றினார். பின்னர் அன்னார் தனது இரண்டு கரங்களால் தனது தலையை வருடினார்கள். மேலும் தனது கரங்களை முன்னே கொண்டு வந்தார்கள். பின்னர் பின்னால் கொண்டு சென்றார்கள். மேலும் இதுபோன்றே நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்ததை கண்டேன் என அன்னார் கூறினார்கள். (சஹீஹுல் புகாரி.... ஹதீஸ் எண் 1840)

தலையை கழுவியவாறு ஒரு முறை முன்பாகவும் பின்னர் பின் புறமும் கைகளை கொண்டு சென்றார்கள். ஹஸ்ரத் சயீத் பின் முஸய்யப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முடியில் மரக்குச்சி போன்ற ஏதோ ஒன்றை கண்டார்கள். அதனை அதிலிருந்து எடுத்து விட்டார்கள். மேலும் அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் காட்டினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ அய்யூபிடமிருந்து அவர் வெறுக்கின்ற விஷயத்தை அல்லாஹ் அகற்றி விடட்டுமாக என்று கூறினார்கள்.

மற்றொரு அறிவிப்பில் வருகிறது. அய்யூபே! உமக்கு துன்பம் ஏற்படாமல் இருக்கட்டுமாக என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 614, ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) ஹதீஸ் எண் 34568,37569 – 1985 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் ஜமல் போர், ஸஃபீன் போர் மற்றும் நெஹர்வான் போர் ஆகிய போர்களில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் படையில் முன்னால் இருந்த பகுதியில் பங்கு பெற்றிருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 22 ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை இருந்தது. அது இந்த விஷயத்திலிருந்து நமக்கு தெரிய வருகிறது. அதாவது ஹஸ்ரத் அலி அவர்கள் கூஃபாவை தமது தாருல் கிலாஃபாவாக ஆக்கிக் கொண்டு அங்கு இடம்பெயர்ந்தபோது ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களை அன்னார் மதீனாவின் கவர்னராக நியமனம் செய்தார்கள். ஹிஜ்ரி 40 ஆம் ஆண்டு வரை அன்னார் மதீனாவின் கவர்னராக இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் யஸ்ர் பின் அபூ வாரிதா என்பவரின் தலைமையில் அமீர் முஆவிய்யாவின் சிறிய படை மதீனாவின் மீது தாக்குதல் நடத்தியது. அப்போது ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து புறப்பட்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூஃபாவிற்கு சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு சஹாபாக்களுக்கு கிலாஃபத்தின் தர்பாரிலிருந்து மாதாந்திர சன்மானம் கிடைத்து வந்தது. ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்களுக்கு முதலில் 4000 கிடைத்திருந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தனது கிலாஃபத் காலகட்டத்தில் அதனை 20000 ஆக ஆக்கினார்கள். முன்னர் 8 அடிமைகள் அவர்களின் நிலத்தை விவசாயம் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் 40 அடிமைகளாக அதிகரித்து விட்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 3 பக்கம் 153... – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹபீப் பின் அபீ சாபித் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் அமீர் முஆவியா அவர்களிடத்தில் வந்தார்கள். அவர்களிடத்தில் தன்மீதுள்ள கடன் பற்றி புகார் செய்தார்கள். அப்போது அவர் எதனை விரும்புகின்றார் என்பதை அமீர் முஆவியா கருத்தில் கொள்ளவில்லை. மாறாக, அவர் எதனை விரும்பவில்லையோ அதனை அன்னார் கருத்தில் கொண்டார்கள். அதாவது அபூ அய்யூபின் கூற்றை பார்க்கவில்லை. மாறாக, அவர் விரும்பாததை பார்த்தார். அவர்கள் விரும்பியதை கருத்தில் கொள்ளவில்லை. அப்போது ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். பிற்காலத்தில் நீர் நிச்சயம் முன்னுரிமை வழங்கப்படுவதை காண்பீர். அதாவது உமது விருப்பங்கள் மாறி விடும். முஆவியா அவர்களோ, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு எந்த விஷயத்தை வழிகாட்டினார்கள் என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் பொறுமை செய்யுங்கள். அதாவது உங்கள் விருப்பங்கள் மாறிவிடும்போதும், உங்களது கூற்றுகள் செவிமடுக்கப்படாதபோதும், விருப்பத்திற்குரிய விஷயங்கள் செவிமடுக்கப்படாதபோதும் நீங்கள் பொறுமையை மேற்கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு அவ்வாறென்றால் நீங்கள் பொறுமையை மேற்கொள்ளுங்கள் என்று அமீர் முஆவியா அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொறுமை செய்யுங்கள் என்று கூறியிருக்கும்போது நீங்கள் பொறுமை செய்யுங்கள்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உம்மிடம் ஒருபோதும் எதனையும் யாசிக்கமாட்டேன் என்று கூறி ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் பஸ்ரா சென்று விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடத்தில் சென்று தங்கினார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அன்னாருக்காக தனது வீட்டை காலி செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நீங்கள் எப்படி நடந்து கொண்டீர்களோ அதுபோன்று நான் நிச்சயம் உங்களுடன் நடந்து கொள்வேன். நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்ததுபோன்று நான் உங்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் தனது குடும்பத்திற்கு கட்டளையிட்டார்கள். எனவே அவர்களும் வெளியில் சென்று விட்டார்கள். மேலும் வீட்டில் என்ன உள்ளதோ அவை அனைத்தும் உங்களுக்குரியது என ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் அவர்கள் ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்களுக்கு 40000 திர்ஹம் மற்றும் 20 அடிமைகளையும் வழங்கினார்கள். மேலும் தனக்கு வேறு ஏற்பாட்டைச் செய்து கொண்டார்கள். அபூ அய்யூப் அவர்களுக்கு வீட்டை மட்டும் கொடுக்கவில்லை. மாறாக, 40000 திர்ஹம்களையும் 20 அடிமைகளையும் கொடுத்தார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 614,615 ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி), ஹதீஸ் எண் 37570 – 1985 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்,

وَاَنْفِقُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ وَلَا تُلْقُوْا بِاَيْدِيْكُمْ اِلَى التَّهْلُكَةِ وَاَحْسِنُوْا اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُحْسِنِيْنَ

(2:196) என்ற வசனத்திற்கு விளக்கவுரை எழுதியவாறு கூறுகின்றார்கள்: இந்த வசனத்தின் பொருளை புரிவதில் மக்களுக்கு பெரும் தவறு ஏற்பட்டுள்ளது. அதாவது அவர்களுக்கு இறைவழியில் ஏதாவது துன்பம் ஏற்பட்டு விட்டால் உடனடியாக இது தம்மைத்தாமே அழிவில் போட்டுக் கொள்ளும் காரியமாகும் என்று அவர்கள் கூறி விடுகின்றனர். ஏனென்றால் அல்லாஹ் وَلَا تُلْقُوْا بِاَيْدِيْكُمْ اِلَى التَّهْلُكَةِ என்று கூறியுள்ளான். அதாவது உங்களை நீங்கள் அழிவில் போட்டுக் கொள்ளாதீர்கள். அவ்வாறிருக்க நாம் இதில் எவ்வாறு பங்கு பெற முடியும் என்று அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் எங்கு மரணத்திற்கான அச்சம் இருக்குமோ அங்கிருந்து முஸ்லிம்கள் ஓடி விட வேண்டும். அங்கு கோழைத்தனத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பது ஒருபோதும் இதன் பொருளல்ல. மாறாக, இதன் பொருள் என்னவென்றால், எதிரிகளுடன் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது தனது செல்வத்தை அதிகமாக செலவிடுங்கள். நீங்கள் உங்களது செல்வத்தை தடுத்து நிறுத்திக் கொண்டால் நீங்கள் உங்களது கைகளாலேயே உங்களின் அழிவிற்கான ஏற்பாட்டைச் செய்து கொள்வீர்கள் என்பதே அதன் பொருளாகும்.

எனவே ஹதீஸில் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகின்றது. அன்னார் கிஸ்தன்தீனியா வெற்றி கொள்வதற்காக சென்று கொண்டிருக்கும்போது கூறினார்கள். இந்த வசனம் அன்ஸாராகிய நம்மைப் பற்றி இறங்கிய வசனமாகும். முன்னர் நாம் இறைவழியில் நமது செல்வங்களை செலவிட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் இறைவன் தனது மார்க்கத்தை உறுதிபடுத்தி கண்ணியமளித்தபோதும் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தபோதும் நாம் இவ்வாறு கூறினோம்: قُلْنَا هَلْ نُقِيْمُ فِيْ اَمْوَالِنَا وَنُصْلِحُهَا இப்போது நாம் நமது செல்வங்களை பாதுகாக்க வேண்டும். மேலும் அதனை ஒன்றுதிரட்ட வேண்டும். அவ்வாறு செய்தால் அது சிறந்ததாக இருக்கும் என்று கூறினோம். இந்நிலையில் இந்த வசனம் இறங்கியது. அதாவது அல்லாஹ்வின் வழியில் உங்களது செல்வத்தை செலவிடுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளாதீர்கள். நீங்கள் அவ்வாறு செய்தால் அதன் பொருள் நீங்கள் உங்களை நீங்களே அழிவிற்குள்ளாக்கிக் கொள்கின்றீர்கள் என்று பொருள். எனவே நீங்கள் உங்களது செல்வங்களை சேமிக்காதீர்கள். மாறாக, அல்லாஹ்வின் வழியில் அதனை அதிகமாக செலவிடுங்கள். இல்லையென்றால் உங்களது உயிர்கள் வீணாகி விடும். எதிரிகள் உங்கள் மீது மேலோங்கி விடுவார்கள். அதன் விளைவாக நீங்கள்

### திருக்குர்ஆனிலிருந்து...

(நபியே) நிச்சயமாக நாம் உமக்கு மிகுதி(யான நன்மை)யினை வழங்கியுள்ளோம். எனவே நீர் (நன்றி தெரிவிக்க) உமது இறைவனை நீர் (மிகுதியாக) தொழுது, தியாகம் செய்வீராக. நிச்சயமாக உமது பகைவனே, ஆண் சந்ததியற்றவன். (108:2–4)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

அழிந்துபோய் விடுவீர்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 429)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்குப் பிறகு அமீர் முஆவியாவின் அரசாங்கத்தின் காலம் வந்தது. அப்போது உக்பா பின் ஆமிர் முஆவிய்யா சார்பாக எகிப்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். ஹஸ்ரத் உக்பா அவர்களின் அமாரத் காலகட்டத்தில் ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்களுக்கு இரண்டு முறை எகிப்து பயணம் செய்வதற்கான சந்தர்ப்பம் வந்தது. ஹஸ்ரத் உக்பா அவர்கள் மிக சிறப்பான ஹதீஸ் ஒன்றை அறிவிப்பு செய்கின்றார்கள் என்பதை ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். ஒரு ஹதீஸை பெறுவதற்காக மட்டுமே ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் முதுமையில் பயணத்திற்கான துன்பத்தை சகித்துக் கொண்டார்கள். இரண்டாவது முறை ரோமானிய போரில் பங்கு பெறும் எண்ணத்துடன் எகிப்திற்கு சென்றிருந்தார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பாகம் 1 பக்கம் 113 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

மதீனாவின் கவர்னராக இருந்த மர்வான் ஒரு நாள் வந்தார். ஒருவர் தனது முகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கபரின் மீது வைத்திருந்ததை பார்த்து அவரிடம், நீர் என்ன செய்து கொண்டிருக்கின்றீர் என்பது உமக்கு தெரியுமா? என்று மர்வான் கேட்டார். இவ்வாறு குனிந்து சஜ்தா செய்து நீங்கள் ஷிர்க் செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்றும் கூறினார். பின்னர் மர்வான் அந்த நபருக்கு அருகில் வந்து பார்த்தபோது அந்த நபர் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி என்பதை அறிந்து கொண்டார். அப்போது ஆம்! நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்துள்ளேன். நான் இந்த கற்களிடம் வரவில்லை என்று ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 785 ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி, ஹதீஸ் எண் 23983 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதன் பொருள் என்னவென்றால், நான் அன்பின் காரணமாக குனிந்திருக்கின்றேனேயொழிய, நான் கற்களுக்கு சஜ்தா செய்யவில்லை. அதேபோன்று நான் எந்த ஷிர்க்கும் செய்யவில்லை. மாறாக, இது அன்பின் வெளிப்பாடாகும். இதிலும் அல்லாஹ்வின் ஏகத்துவமே எனது உள்ளத்தில் உள்ளது. ஷிர்க் இல்லை.

அபூ அப்திர் ரஹ்மான் ஹுப்லி அறிவிக்கின்றார்கள்: நாங்கள் கடலில் இருந்தோம். அப்போது அப்துல்லாஹ் பின் கைஸ் ஃபஸாரி எங்களுக்கு அமீராக இருந்தார். எங்களுடன் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரியும் இருந்தார்கள். அன்னார் போரில் பெறப்பட்ட செல்வங்களை பங்கிடக்கூடியவர்களை கடந்து சென்றார்கள். அவர் கைதிகளின் கண்காணிப்பாளராகவும் இருந்தார். அப்போது ஒரு பெண் அழுது கொண்டிருப்பதை ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் கண்டார்கள். அந்த பெண்ணிற்கு என்ன நேரிட்டது? என்று அன்னார் கேட்டார்கள். அந்த பெண்ணையும் அவரது மகனையும் பிரித்து விட்டார்கள் என்று மக்கள் கூறினர்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்போது அன்னார் அந்த பிள்ளையின் கையை பிடித்து அவரது தாயின் கையில் ஒப்படைத்து விட்டார்கள். அதன் பிறகு போரில் பெறப்பட்ட செல்வங்களை பங்கிடக்கூடிய அப்துல்லாஹ் பின் கைஸ் அவர்களிடம் சென்றார்கள். அவர்களிடத்தில் அனைத்தையும் கூறி விட்டார்கள். அன்னார் ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்களை வரவழைத்தார்கள். பின்னர் நீங்கள் ஏன் இவ்வாறு செய்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், எவர் தாய்க்கும் மகனுக்கும் இடையில் பிரிவை ஏற்படுத்தினாரோ அல்லாஹ் அவருக்கும் அவருடைய அன்பர்களுக்குமிடையில் கியாமத் நாளன்று பிரிவை ஏற்படுத்தி விடுவான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன் என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 764 முஸ்னத் அபூ அய்யூப் அன்ஸாரி, ஹதீஸ் எண் 23895 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எனவே எவர்கள் தாயிடமிருந்து பிள்ளைகளை பறித்துக் கொள்கின்றார்களோ அவர்களுக்கு இதில் படிப்பினை உள்ளது. மேலும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபணை செய்யக்கூடியவர்கள்தாங்கள் சுயம் என்ன செய்கின்றார்கள்? என்பதையும், இஸ்லாம் எந்த அளவிற்கு கருத்தில் கொண்டுள்ளது என்பதையும் பார்க்க வேண்டும். கடந்த நாட்களில் வந்த அமெரிக்காவின் செய்தியாகும். அங்கு அகதிகளாக வந்தவர்களை தனித்தனியாக பிரித்து விட்டார்கள். தாய்மார்களை தனியாகவும், பிள்ளைகளை தனியாகவும் வைத்து விட்டார்கள். சில பிள்ளைகளல் சிறிது காலம் கழித்து தங்களது தாயை அடையாளம்கூட கண்டு கொள்ள முடியவில்லை. எவ்வாறிருப்பினும் தாய்மார்களை பிள்ளைகளிடமிருந்து பிரிக்காதீர்கள். ஒருவர் மற்றவருக்கு துன்பம் கொடுக்காதீர்கள் என்று இஸ்லாம் இந்த அளவிற்கு வலியுறுத்தியுள்ளது.

ஹஸ்ரத் முர்ஷத் பின் அப்தில்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் எங்களிடம் ஜிஹாது செய்யும் எண்ணத்துடன் வந்தார்கள். அந்நாட்களில் உக்பா பின் ஆமிர் எகிப்தின் கவர்னராக இருந்தார்கள். அவர்கள் மக்ரிப் நேரத் தொழுகையை தாமதப்படுத்தினார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் அவரிடம் சென்று, உக்பாவே! இது எப்படிப்பட்ட தொழுகை என்று வினவினார்கள். அதற்கு நாங்கள் பணிகளில் மும்முரமாக இருந்தோம் என்று உக்பா பதிலளித்தார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இவ்வாறு செய்ததை நீங்கள் பார்த்துள்ளீர்கள் என்று மக்கள் கருதிவிடக்கூடாது என்பதே எனது நோக்கமாகும் என்று கூறினார்கள். மேலும் மக்ரிப் தொழுகையை தாமதிக்காதவரை எனது சமுதாயத்திடம் நன்மை எஞ்சியிருக்கும். அல்லது எனது சமுதாயம் தனது இயல்பில் நிலைநிற்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை நீர் கேட்கவில்லையா? என்று கேட்டார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 773 முஸ்னத் அபூ அய்யூப் அன்ஸாரி, ஹதீஸ் எண் 23931 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூ வாஸல் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரியை சந்தித்தேன். அன்னார் என்னுடன் கை குலுக்கினார்கள். மேலும் எனது நகம் மிகவும் நீளமாக இருப்பதைக் கண்டார்கள். அப்போது அன்னார் கூறினார்கள்: உங்களில் ஒருவர் விண்ணின் செய்திகள் பற்றி கேள்வி கேட்கின்றார். மேலும் அவர் தனது நகங்களை பறவைகளின் நகங்களைப்போன்று நீளமாக்கிக் கொள்கின்றார். அதில் அசுத்தமும், அழுக்குகளும் ஒன்றுகூடி விடுகின்றன என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று என்னிடம் கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 775 முஸ்னத் அபூ அய்யூப் அன்ஸாரி, ஹதீஸ் எண் 23938 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது பெரும் பெரும் விஷயங்களைப் பற்றி கேட்கின்றீர்கள். இறைஞானம் பற்றி கேட்கின்றீர்கள். ஆனால் உங்களது நிலைமை எப்படி உள்ளது என்றால் உங்களது நகங்கள் நீளமாக உள்ளன. அதில் அழுக்குகள் ஒன்றுகூடி விடுகின்றன. எனவே நகங்களை வெட்டி வைப்பீர்களாக. ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பு முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலில் இடம் பெற்றுள்ள ஹதீஸ் ஆகும்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களின் சிறப்பும் மேன்மையும் எந்த அளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சஹாபாக்கள் அவர்களிடம் விவகாரங்களைப் பற்றி கேட்டறிந்து கொள்வார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ், இப்னு உமர், பரா பின் ஆஸிப், அனஸ் பின் மாலிக், அபூ உமாமா, ஸைது பின் காலித், மிக்தாம் பின் மஹ்தி, கரிப், ஜாபிர் பின் ஸம்ரா, அப்துல்லாஹ் பின் யஸீத் கத்மி ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து தர்பிய்யத் பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்களிடமிருந்தும் பயன் பெற்று வந்தார்கள். தாபியீன்களில் ஸயீத் பின் முஸய்யப், உர்வா பின் ஸுபைர், சாலிம் பின் அப்துல்லாஹ், அதா பின் யஸார், அதா பின் யஸீத் லைஸி, அபூ ஸலமா, அப்துர் ரஹ்மான் பின் அபீ லைலா ஆகியோர் மிக உயர்ந்த அந்தஸ்துடைய மக்கள் ஆவார்கள். அவர்களும் ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் மீது அன்பு கொண்டிருநந்தார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பாகம் 1 பக்கம் 115 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் முஆவிய்யாவின் காலகட்டத்தில் ஜிஹாதிற்காக சென்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் நோய்வாய்ப்பட்டு விட்டேன். நோய் கடுமையானது. அப்போது நான் எனது நண்பரிடம் கூறினேன். நான் மரணித்து விட்டால் என்னை எடுத்துக் கொண்டு செல்லவும். நீங்கள் எதிரிகளுக்கு எதிராக போர் புரிந்து கொண்டிருந்தால் என்னை உங்களது கால்களுக்கு அருகிலேயே நல்லடக்கம் செய்து விடவும். நான் உங்களுக்கு ஒரு ஹதீஸ் ஒன்றை கூறுவேன். நான் அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டுள்ளேன். எனது மரணம் அருகில் இல்லாமல் இருந்திருப்பின் நான் அதனை கூறியிருக்க மாட்டேன். எவர் அல்லாஹ்விற்கு எதனையும் இணையாக்காத நிலையில் மரணிப்பாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விட்டார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன்.

மற்றொரு அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களின் மரணம் நெருங்கியதும் அன்னார் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிமிருந்து கேட்ட ஒரு விஷயத்தை உங்களிடமிருந்து மறைத்திருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பாவம் செய்யவில்லையென்றால் பாவம் செய்யக்கூடிய ஒரு சமுதாயத்தை இறைவன் உருவாக்கி இருப்பான். பின்னர் அல்லாஹ் அவர்களை மன்னித்திருப்பான். அதாவது அல்லாஹ்வின் ரஹ்மானிய்யத் மற்றும் மன்னித்தல் என்ற பண்பை நீங்கள் இந்த அளவிற்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

முஹம்மது என்ற அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். முஸ்லிம்களின் எந்தவொரு போரிலிருந்தும் பின்தங்கி இருக்கவில்லை. ஒரே நேரத்தில் இரண்டு போர்கள்

நடந்து கொண்டிருந்தால் ஏதாவதொரு போரில் அன்னார் நிச்சயம் பங்கு பெற்றிருந்தார்கள். ஒரே ஒரு ஆண்டு அன்னார் போரில் பங்கு பெறவில்லை. ஏனென்றால் படைக்கு ஒரு இளைஞர் தளபதியாக ஆக்கப்பட்டிருந்தார். அந்த ஆண்டு அவர்கள் பின்தங்கி இருந்தார்கள். அந்த ஆண்டிற்கு பிறகு அன்னார் மிகவும் வருத்தப்பட்டார்கள். மேலும் எனக்கு யார் தலைவராக நியமிக்கக்கப்பட்டிருக்கின்றார் என்பதைப் பற்றி எனக்கு என்ன கவலை? எனக்கு யார் தலைவராக நியமிக்கக்கப்பட்டிருக்கின்றார் என்பதைப் பற்றி எனக்கு என்ன கவலை? எனக்கு யார் தலைவராக நியமிக்கக்கப்பட்டிருக்கின்றார் என்பதைப் பற்றி எனக்கு என்ன கவலை? என அன்னார் மூன்று முறை இதை கூறிக் கொண்டிருந்தார்கள். எந்த இளைஞரை தலைவராக நியமிக்கப்பட்டதாக அறிவிப்பில் வருகின்றதோ அவரது பெயர் அப்துல் மாலிக் பின் மர்வான் ஆவார்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: அதன் பின்னர் ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். படையில் யஸீத் பின் முஆவியாவும் இருந்தார். அவர் அன்னாரை நலம் விசாரிப்பதற்காக அன்னாரிடத்தில் வந்தார். உங்களுக்கு ஏதும் தேவை இருந்தால் கூறுங்கள் என்று கூறினார். அப்போது அன்னார் கூறினார்கள்: எனது தேவை என்னவென்றால் நான் மரணித்து விட்டால் என்னை எடுத்துச் செல்லுங்கள். எதிரியின் நாட்டில் எந்த அளவுக்கு கொண்டு செல்ல முடியுமோ கொண்டு செல்லுங்கள். அதற்கு சாத்தியம் இல்லையென்றால் அங்கேயே என்னை அடக்கம் செய்து விட்டு திரும்பி வந்து விடுங்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அவர் அன்னாரை எடுத்துச் சென்றார். வாய்ப்பிருந்தவரை எதிரியின் நாட்டுக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். மேலும் அவரை அங்கு அடக்கம் செய்து விட்டு திரும்பி வந்து விட்டார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். அல்லாஹ் கூறியுள்ளான்: اِنۡفِرُوۡا خِفَافًا وَّ ثِقَالًا மெலிந்தவரும், வலிமையானவரும் புறப்படுங்கள். நான் என்னை மெலிந்தவராகவும், வலிமையானவராகவும் பார்க்கின்றேன்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. மக்காவாசிகளில் ஒருவர் அறிவிக்கின்றார். யஸீத் பின் முஆவிய்யா ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களிடத்தில் வந்தபோது மக்களுக்கு எனது சலாத்தை கூறுங்கள். அவர்களால் எவ்வளவு தூரம் என்னை கொண்டு செல்ல முடியுமோ கொண்டு செல்லட்டும் என்று கூறினார்கள். அப்போது யஸீதும் அன்னார் கூறிய அனைத்தையும் மக்களுக்கு கூறினான். மக்களும் அதை ஏற்றுக் கொண்டனர். அன்னாரின் ஜனாஸாவை எவ்வளவு தூரம் கொண்டு செல்ல முடியுமோ கொண்டு சென்றனர். ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தமது மரணம் வரை ஜிஹாதுடன் ஒன்றிணைந்திருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் இஸ்தான்புல் என்ற இடத்தில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹிஜ்ரி 52 ஆம் ஆண்டு யஸீத் பின் முஆவிய்யா தனது தந்தை முஆவிய்யாவின் கிலாஃபத்தில் கிஸ்தன்தினியாவில் போர் செய்தான். அதே ஆண்டு ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களின் மரணமும் நிகழ்ந்தது. யஸீத் பின் முஆவிய்யா அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார். அல்லது அன்னாரின் கபர் ரோமிலுள்ள கிஸ்தன்தினியா கோட்டையில் உள்ளது. அறிவிப்பாளர் கூறுகின்றார்: ரோம்வாசிகள் அன்னாரின் கபரை பாதுகாத்தும், பழுதுபார்த்தும் வருகின்றனர். மேலும் வறட்சியின் நாட்களில் அவர்கள் அன்னாரின் மூலம் தண்ணீர் வேண்டி வந்தனர் என்பது தெரிய வந்துள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 369–370 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் அமீர் முஆவிய்யாவின் காலகட்டத்தில் யஸீதின் தலைமையில் ரோமானிய அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்ற போரில் பங்கு பெற்றார்கள். இஸ்தான்புல் நகரத்தில் ஹிஜ்ரி 50 அல்லது 51 வது ஆண்டில் அன்னார் மரணமடைந்தார்கள். அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் யஸீத் குதிரை சவாரிகளுக்கு கட்டளையிட்டான். அவை ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி கபருக்கு முன்பும் பின்பும் ஓடிக் கொண்டிருந்தன. எந்த அளவுக்கு என்றால் அன்னாரின் கபரின் அடையாளம் அழிந்து விட்டது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகின்றது. ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் எந்த இரவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்களோ அந்த நாள் காலையில் ரோமானியர்கள் முஸ்லிம்களிடம் இரவில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? என்று கேட்டனர். அதற்கு முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி ஆகிய இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரும் சஹாபாக்களைச் சார்ந்தவர் ஆவார். இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் அவர்கள் அனைவரிலும் முதன்மையானவர் ஆவார். நீங்கள் பார்த்ததுபோன்று நாங்கள் அவரை நல்லடக்கம் செய்தோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! கபர் தோண்டப்பட்டால் எங்களிடம் அரசாங்கம் இருக்கும் வரை அரபு மண்ணில் உங்களுடைய இந்த மணி ஒலிக்காது என்று கூறினர்.

அவர்களுக்கு வறட்சி ஏற்படும்போது அன்னாரின் கபரிலிருந்து சிறிதளவு மண்ணை அகற்றுவார்கள். அப்போது மழை பெய்து விடும் என்று முஜாஹித் கூறுகின்றார்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 23 ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது இப்போதும் அங்குள்ள நடைமுறையாகும். இது எந்த அளவுக்கு சரியானது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 50 அல்லது 51 அல்லது 52 வது ஆண்டு இஸ்தான்புல் போரில் மரணமடைந்தார்கள். பெரும்பாலும் ஹிஜ்ரி 52 ஆம் ஆண்டு என்றே கூறுகின்றார்கள்.

(அல் அஸாபா தொகுதி 2 பக்கம் 201 ஹஸ்ரத் காலித் பின் ஸைது – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களின் கபர் துருக்கியிலுள்ள இஸ்தான்பூலில் உள்ளது. துருக்கியின் பெரும்பாலான மக்கள் மன அமைதிக்காக அங்கு செல்கின்றனர்.

(அர்ஸலான் பின் அஹ்தர் அவர்கள் எழுதிய தபர்ருகாத் ஸஹாபா கா தஸ்வீரி அல்பம் என்ற நூல் பக்கம் 35,50 – 2011 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள அர்ஸலான் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

இத்துடன் பதரி சஹாபாக்களின் நற்குறிப்பு நிறைவடைகிறது. ஆனால் நான்கு கலீஃபாக்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ். சிலரைப் பற்றி ஏற்கெனவே சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. இனி விரிவாக எடுத்துரைப்பேன். அதேபோன்று துவக்கத்தில் சில சஹாபாக்களின் சுருக்கமான நற்குறிப்பு கூறப்பட்டுள்ளது. அவர்களைப் பற்றியும் வேறு ஏதாவது விஷயங்கள் கிடைத்தால் அதையும் நான் எடுத்துரைப்பேன். இவை அனைத்தும் எழுதப்படும்போதும் அவர்களின் நற்குறிப்பில் இடம்பெற்று விடும். அப்படிப்பட்டவர்கள் ஒரு சிலரே இருப்பார்கள்.

இப்போது நான் கடந்த நாட்களில் வஃபாத்தான சில மர்ஹூம்களின் நற்குறிப்பை கூற விரும்புகின்றேன். மேலும் தொழுகைகளுக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். முதலாவது மதிப்பிற்குரிய முஅல்லிம் அப்துல் ஹய் மண்டல் சாஹிப் அவர்களுடையதாகும். இந்தியாவைச் சார்ந்தவர். செப்டம்பர் மாதம் 25 ஆம் தேதி 2020 ஆம் ஆண்டு மாரடைப்பின் காரணமாக 53 வயது மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

1999 ஆம் ஆண்டு மர்ஹூம் ஆய்வு செய்து ஜமாஅத்தில் இணைந்து கொண்டார். 2003 ஆம் ஆண்டு ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனிலிருந்து கல்வி பயின்று வெளியேறியதிலிருந்து மரணம் வரை உழைப்புடனும், கலப்பற்றதன்மையுடனும், ஆர்வமுடனும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வந்துள்ளார். இந்த அடிப்படையில் மர்ஹூமின் தொண்டிற்கான காலகட்டம் 17 வருடங்கள் ஆகும். மர்ஹூம் மிகவும் கலப்பற்றதன்மை கொண்டவராகவும், மார்க்கப்பற்று கொண்டவராகவும், கட்டுப்பட்டு நடக்கக் கூடியவராகவும், தொழுகைகளை பேணக்கூடியவராகவும், ஜமாஅத்தின் மீது நேசம் கொண்ட முஅல்லிமாக இருந்தார்கள். தனக்குப் பிறகு மனைவியைத் தவிர இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அல்லாஹ் அன்னாரின் மனைவி மக்களுக்கும் அமைதியை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா முஅல்லிம் மதிப்பிற்குரிய சிராஜுல் இஸ்லாம் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் பெங்கால் முர்ஷிதாபாத் மாவட்டத்தைச் சார்ந்தவர் ஆவார். அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி 2020 ஆம் ஆண்டு தனது 60 வது வயதில் இறைநியதிக்கேற்ப வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மர்ஹூம் முஅல்லிம் சாஹிப் அவர்கள் 2002 ஆம் ஆண்டு காதியான் ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனில் 6 மாத முஅல்லிம்களுகான பாடத்திட்டத்தில் பயிற்சி பெற்றிருந்தார்கள். 2020 வரை தற்காலிக முஅல்லிமாக ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வந்தார்கள். இந்த அடிப்படையில் மர்ஹூம் தொண்டாற்றிய ஆண்டுகள் 18 ஆகும். மர்ஹூம் மிகவும் கலப்பற்றதன்மை கொண்டவராகவும், மார்க்கப்பற்று கொண்டவராகவும், தொழுகையையும், நோன்பையும் பேணக்கூடியவராகவும், ஜமாஅத்தின் மீது அன்பு கொண்ட உழைக்கும் முஅல்லிமாகவும் இருந்தார்கள். மர்ஹூம் தனது மனைவி தவிர மூன்று மகள்களை தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். மூத்த இரண்டு மகள்களின் திருமணமும் நடைபெற்று விட்டது. மூன்றாவது மகள் கல்வி பயின்று வருகின்றார். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவர்களின் உறவினர்களுக்கு பொறுமையை வழங்குவானாக. மேலும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

மூன்றாவது ஜனாஸா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகள் வழிப்பேரனும், ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களின் மகன் வழிப்பேரனும், ஹஸ்ரத் நவாப் அம்மத்துல் பேகம் சாஹிபா

மற்றும் ஹஸ்ரத் நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிப் ஆகியோரின் மகனுமாகிய மதிப்பிற்குரிய ஷாஹிது அஹ்மது கான் பாஷா சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி தமது 85 வது வயதில் மருத்துவமனையில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளால் அன்னார் மூஸியாக இருந்தார்கள். மதிப்பிற்குரிய ஷாஹிது அஹ்மது கான் சாஹிப் அவர்கள் இரண்டு திருமணங்கள் செய்திருந்தார்கள். முதல் திருமணம் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மகளாகிய மதிப்பிற்குரிய அம்மத்துல் ஷுகூர் சாஹிபா அவர்களுடன் 1962 ஆம் ஆண்டு நடந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்ததன் காரணமாக அன்னாரின் திருமணத்தை மவ்லானா ஜலாலுத்தீன் சாஹிப் ஷம்ஸ் அவர்கள் நடத்தி வைத்தார்கள். முதல் திருமணத்தின் மூலமாக இரண்டு மகன்களும் மூன்று மகள்களும் என அன்னாருக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர். இரண்டாவது திருமணம் மர்ஹூம் ஸைது சாஹிப் அவர்களின் மகளாகிய சமீனா ஸைது அவர்களுடன் 1977 ஆம் ஆண்டு நடைபெற்றது. அன்னார் மூலம் ஒரு மகன் உள்ளார். அவர் தற்போது அமெரிக்காவில் உள்ளார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் முறையாக அன்னாருக்கு எந்த ஜமாஅத் தொண்டும் இல்லை. ஆனால் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் சில வெளிநாட்டு சுற்றுப் பயணங்களில் செல்வதற்கு அன்னார் பாக்கியம் பெற்றுள்ளார். அங்கு அவருக்கு தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதேபோன்று அன்னாரின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், அன்னாரின் மனைவி எழுதுகின்றார்: மர்ஹூம் மிகவும் ஏழைகளை பராமரிப்பவராக இருந்தார்கள். ஏராளமான ஏழைகளுக்கு செலவழித்து வந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், வீடு ஒன்றும் கூட கட்டிக் கொடுத்துள்ளார்கள். தொடர்ச்சியாக ஏழைகளுக்கு பொருளாதார உதவிகளை செய்து வந்துள்ளார்கள். அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அன்னாரின் பிள்ளைகளை ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக வைப்பானாக.

அடுத்த ஜனாஸா யூ.கே வைச் சார்ந்த மதிப்பிற்குரிய செய்யது மசூது அஹ்மது ஷா சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் செப்டம்பர் 8 ஆம் தேதி இதயத்துடிப்பு நின்றுபோனதால் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தையாகிய ஹஸ்ரத் செய்யது நாஸிம் ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அன்னார் 1902 ஆம் ஆண்டு 20 வயதில் காதியான் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள். செய்யத் மசூது அஹ்மது ஷா சாஹிப் அவர்கள் 1962 ஆம் ஆண்டு யூ.கே வந்த பிறகு நிரந்தரமாக இங்கு வசித்து வந்தார்கள். ஷிஃபேல்டில் ஜமாஅத் உருவான பிறகு அன்னாருடைய வீட்டில்தான் தொழுகை சென்டர் முதலில் உருவாக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டு வரை அன்னார்தான் ஜமாஅத்தின் சதர் பொறுப்பை நிறைவேற்றி வந்தார்கள். அதன் பிறகு 1997 முதல் இறுதி மூச்சு வரை விருந்து உபசரிப்பு செயலராக தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார்கள். மர்ஹூம் இனிமையான இயல்பை உடையவராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும், கண்ணியமிக்கவராகவும், தொண்டாற்றும் உணர்வு கொண்டவராகவும், ஏழைகளின் மீது அனுதாபம் கொண்டவராகவும், ஒரு நல்லடியாராகவும், நன்றியுணர்வு கொண்ட மனிதராகவும் இருந்தார்கள். அன்னாருக்கு கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பு இருந்தது.

அன்னாரின் மகள் டாக்டர் ஆயிஷா சாஹிபா கூறுகின்றார்கள்: எங்களை எப்போதும் ஜமாஅத்துடனும் குறிப்பாக கிலஃபாத்துடனும் இணைப்பதற்கு முயற்சி செய்து வந்தார்கள். ஒவ்வொரு 6 மாதத்திற்குப் பிறகும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திப்பதற்கு அறிவுரை செய்து வந்தார்கள். அல்லாஹ் அன்னாரின் மகளுக்கும், மனைவிக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அல்லாஹ் அவர்களின் பிள்ளைகளையும் அதாவது ஒரு மகள் மற்றும் அன்னாரின் மனைவிக்கு அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

## திருக்குர்ஆனிலிருந்து...

(அழிவு) காலத்தின் மேல் ஆணையாக! நிச்சயமாக, மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். ஆயினும் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்து, உண்மையைக் கொண்டு ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி, பொறுமையுடன் செயலாற்றுமாறு ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி வருபவர்களைத் தவிர (அவர்கள் என்றும் இழப்பிற்காளாக மாட்டார்கள். (103:2–4)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

செவியேற்றால் மார்க்கம் மற்றும் உலகில் உங்களுக்கு சிறந்த அருட்கொடைகளுக்கு வாரிசாக்கப்படுவீர்கள். இப்போது கூறுங்கள். எனது பணிகளில் எவர் எனக்கு உதவியாளராக இருப்பார் என்று கேட்டார்கள். அதற்கு அனைவரும் மௌனமாக இருந்தனர். சபையில் எல்லா பக்கமும் நிசப்தம் நிலவியது.

திடீரென ஒரு பக்கத்திலிருந்து 13 வயதுடைய மெலிந்த சிறுவனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. நான் மிகவும் பலவீனமானவனாக இருக்கலாம். மேலும் எல்லாரை விடவும் நான் சிறுவனாக இருக்கின்றேன். எனினும் நான் உங்களுடன் இருப்பேன் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். இது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் குரலாக இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த சொற்களை செவிமடுத்ததும் அன்னார் உறவினர்களை நோக்கி கூறினார்கள்: நீங்கள் அறிந்திருந்தால் இந்த சிறுவனின் கூற்றை கேளுங்கள். மேலும் ஏற்றுக் கொள்ளுங்கள். கூடியிருந்தவர்கள் அந்த காட்சியை கண்டனர். அதைப் பார்த்து படிப்பினை பெறுவதற்கு பகரமாக அனைவரும் சிரித்தும், கேலி செய்தும், கிண்டலடித்தும் கொண்டிருந்தனர். அபூலஹப் தனது மூத்த சகோதரரான அபூ தாலிப் அவர்களை நோக்கி, இப்போது முஹம்மத் (ஸல்)! உமக்கு கட்டளையிடுகின்றாரா? நீர் உமது மகனை பின்பற்றி செல்வீராக? என்று கூறினான். பின்னர் இந்த மக்கள் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பலவீனத்தின் மீது சிரித்துக் கொண்டு சென்றனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 128,129)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சம்பவமாகும். அன்னார் 11 வயது சிறுவனாக இருந்தார்கள். சிறு பிள்ளைகள் இதை மிக கவனத்துடன் கேட்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ இறங்கியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விருந்திற்கான அழைப்பு கொடுத்தார்கள். அதில் மக்காவின் பெரும் பெரும் செல்வந்தர்களும் அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் நான் சற்று எனது வாதம் தொடர்பாக பேச விரும்புகின்றேன் என்றும் கூறினார்கள். அப்போது அனைவரும் எழுந்து ஓடி விட்டனர். இதைக்கண்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் வந்தார்கள்.

மேலும் சகோதரரே! தாங்கள் என்ன செய்து விட்டீர்கள்? இந்த மக்கள் மிகவும் உலகவாதிகள் ஆவர் என்பதை தாங்கள் அறிவீர்கள். இவர்களுக்கு முதலில் விஷயம் கூறப்பட்டிருக்க வேண்டும். பின்னர் உணவு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்த நம்பிக்கையற்ற மனிதர்கள் சாப்பிட்டு விட்டு ஓடி விட்டனர். ஏனென்றால் இவர்கள் சாப்பாட்டு பிரியர்கள். தாங்கள் முதலில் கூற்றுக்களை கூறியிருந்தால் பின்னர் இரண்டு மணி நேரம் பேசி இருந்தாலும் அவர்கள் நிச்சயம் அமர்ந்திருப்பார்கள். பின்னர் அவர்களுக்கு உணவு வழங்கியிருக்க வேண்டும். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு மீண்டும் ஒரு முறை அவர்களை அழைத்தார்கள். அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்தார்கள். ஆனால் முதலிலேயே சில விஷயங்களை பேசி விட்டார்கள். பின்னர் உணவு வழங்கினார்கள். அதன் பிறகு அன்னார் எழுந்து நின்றார்கள்.

அன்னார் கூறினார்கள்: மக்களே! நான் உங்களுக்கு இறை கூற்றுகளை கூறியுள்ளேன். எனக்கு உதவி செய்யக்கூடிய, எனது பணிகளில் எனது பக்க பலமாக இருக்கக்கூடிய நபர்கள் உங்களில் யாரும் இருக்கின்றார்களா? என்று கேட்டார்கள். மக்காவின் பெரும் பெரும் தலைவர்கள் அங்கு அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் எனது சிறிய தந்தையின் மகனே! தங்களுக்கு நான் உதவி செய்வேன் என்று கூறினார்கள். இவர் சிறுவன் ஆவார் என்று அன்னார் நினைத்தார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் எழுந்து நின்றார்கள். பின்னர் மக்களே! உங்களில் யாராவது எனக்கு உதவி செய்யக் கூடியவர் இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். அப்போதும் அனைத்து பெரியவர்களும் அமர்ந்திருந்தார்கள். 11 வயதுடைய சிறுவன் எழுந்து நின்றான். மேலும், எனது சிறிய தந்தையின் மகனே! நான் உங்களுக்கு உதவி செய்வேன் என்று அந்த சிறுவன் கூறினான். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இறைவனின் பார்வையில் இந்த 11 வயது சிறுவனே இளைஞர் ஆவார். எஞ்சியுள்ள அனைவரும் முதியவர் ஆவர். இன்னும் இளைஞர்களும் உள்ளனர். அவர்களிடம் எந்த வலிமையும் இல்லை. இந்த சிறுவனே அறிவாளி ஆவார் என்று கூறினார்கள். (தொடரும்...)

## திருக்குர்ஆனிலிருந்து...

தங்கள் தொழுகையில் கவனமற்றவர்களாகத் தொழுபவர்களுக்கும் அழிவுதான். (மக்களுக்குக்) காட்டவே அத்தகையோர் விரும்புகின்றனர். அவர்கள் அற்ப நன்மைக்குரிய செயல்களை(க்கூட) தடுத்து விடுகின்றனர். (107:5–8)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க நான்கு கலீஃபாக்களில் ஒருவரும், அன்னாரின் மருமகனுமான ஹஸ்ரத் அலி (ரலி)அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டண் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 நவம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **27 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

நேர்வழி பெற்ற கலீஃபாக்களைப் பற்றிய நற்குறிப்புகளில் இன்று நான் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் அவர்களின் நற்குறிப்பிலிருந்து தொடங்குவேன். ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் பின் அப்தில் முத்தலிப் பின் ஹாஷிம் அவர்களின் தந்தை பெயர் அப்தே மனாஃப் ஆகும். அன்னாரின் சுட்டுப்பெயர் அபூ தாலிப் ஆகும். அன்னாரின் தாயாரின் பெயர் ஃபாத்திமான பின்த் அஸது பின்த் ஹாஷிம் ஆகும். அன்னார் நபித்துவம் தோன்றுவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன் பிறந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உருவத்தோற்றம் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அன்னார் நடுநிலையான உயரம் கொண்டவராக இருந்தார்கள். கண்கள் கருமையாக இருந்தன. தோள் விரிந்ததாக இருந்தது.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபதில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 218... – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் தாயார் தனது தந்தையின் பெயருக்கேற்ப அன்னாருக்கு அஸது என்று பெயர் வைத்தார்கள். அன்னார் பிறந்த நேரத்தில் அபூ தாலிப் அவர்கள் வீட்டில் இல்லை. அபூ தாலிப் அவர்கள் திரும்பி வந்த உடன் அஸது என்பதற்கு பகரமாக அலி என்று பெயர் வைத்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு மூன்று சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உள்ளனர். அன்னாருக்கு தாலிப், அகீல், ஜாஃபர் என்று மூன்று சகோதரர்களும், உம்மே ஹானி மற்றும் உம்மே ஜுமானா என்ற இரண்டு சகோதரிகளும் இருந்தனர். இதில் தாலிப் மற்றும் ஜுமானாவைத் தவிர மற்ற அனைவரும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். (தாரீகுல் ஹமீஸ் தொகுதி 1 பக்கம் 295–297 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அபுல் ஹஸன், அபு ஸப்தீன், அபூ துராப் போன்ற சுட்டுப் பெயர்கள் இருந்தன.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 88 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியின் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் சுஹைல் பின் சஅது அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டிற்கு வருகை தந்தபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை வீட்டில் பார்க்க முடியவில்லை. அப்போது உங்களின் சிறிய தந்தையின் மகன் எங்கே என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, எனக்கும் அவர்களுக்குமிடையில் ஒரு விவகாரம் ஏற்பட்டது. அவர் என்மீது அதிருப்தியடைந்து சென்று விட்டார்கள். மேலும் பள்ளிவாசலில் உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்கு சென்று விட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அங்கு படுத்திருந்தார்கள். அன்னாரின் ஒரு பக்கம் போர்வை விலகி இருந்தது. அன்னாரின் இடுப்புப் பகுதியிலும் மண் ஒட்டியிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மண்ணை துடைத்தார்கள். மேலும் அபூ துராபே! எழுந்திருங்கள். அபூ துராபே!எழுந்திருங்கள் என்று கூறினார்கள். (சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸலாத்.... ஹதீஸ் எண் 441)

அப்போதிலிருந்து அன்னார் அபூ துராப் என்ற சுட்டுப் பெயரால் அழைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பராமரிப்பில் அன்னார் எவ்வாறு வந்தார்கள் என்பது தொடர்பான ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகின்றது. முஜாஹித் பின் ஜபர் அபுல் ஹுஜ்ஜாஜ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: குரைஷிகளுக்கு ஏற்பட்ட ஒரு பெரும் துன்பமானது, அல்லாஹ்வின் புறமிருந்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மீது அருட்கொடைகளுக்கும், நன்மைகளுக்கும் காரணியானது. ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்கள் பெரிய குடும்பத்தைச் சார்ந்தராக இருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹாஷிம் கோத்திரத்தின் மிகவும் செல்வந்தராக இருந்த தனது சிறிய தந்தையான ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: ஒருவரை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். நாம் அந்த இருவருக்கும் ஹஸ்ரத் அபூ தாலிப் சார்பாக போதுமானவர்களாக இருப்போம். அதற்கு ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள், உண்மைதான் என்று கூறினார்கள்.

இருவரும் ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களிடம் சென்றார்கள். நீங்கள் உங்களது குடும்பத்தின் சுமையில் சிலவற்றை எளிதாக்க வேண்டும். எந்த அளவுக்கென்றால் அந்த நிலை உங்களிடமிருந்து மாற வேண்டும் என்று கூறினார்கள். அப்போது அன்னார் சோதனையால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். அபூ தாலிப் அவர்கள், அகீலை என்னிடம் விட்டு விடுங்கள். அவனைத் தவிர்த்து உங்கள் விருப்பப்படி எவரையும் அழைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கரங்களைப் பிடித்து அன்னாரை தன்னுடன் இணைத்துக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் ஹஸ்ரத் ஜாஃபர் அவர்களை அழைத்துக் கொண்டார்கள். மேலும் அவரை தன்னுடன் இணைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தங்கினார்கள். எந்த அளவுக்கென்றால் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நபியாக ஆக்கினான். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அன்னாரை பின்பற்றி நடந்தார்கள். அன்னார் மீது ஈமான் கொண்டார்கள். அன்னாரை உண்மைப்படுத்தினார்கள். ஹஸ்ரத் ஜாஃபர், ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களுடன் தங்கினார்கள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் ஜாஃபர் அவர்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் ஹஸ்ரத் ஜாஃபர் அவர்களிடமிருந்து பிரிந்து போய் விட்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 225... – 2002 ஆம் ஆண்டு லபனாலிலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இதே விஷயத்தை குறிப்பிட்டவாறு தாரீகே திப்ரியில் அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. அதனை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்: அபூ தாலிப் அவர்கள் மிகவும் கண்ணியமிக்க ஒரு மனிதராக இருந்தார்கள். ஆனால் ஏழையாக இருந்தார்கள். மிகக் கஷ்டத்துடன் அவர்களது வாழ்க்கை கழிந்து வந்தது. குறிப்பாக மக்காவில் வறட்சி ஏற்பட்ட நாட்களில் அன்னாரின் நாட்கள் மிகவும் துன்பங்களில் கழிந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தனது சிறிய தந்தையின் இந்த வேதனையைக் கண்டபோது தனது மற்றொரு சிறிய தந்தையான ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடம் ஒரு நாள் இவ்வாறு கூறினார்கள்: சிறிய தந்தையே! தங்களின் சகோதரரான அபூ தாலிப் அவர்களின் பொருளாதாரம் மிகவும் கஷ்டத்தில் உள்ளது. அன்னாரின் மகன்களில் ஒருவரை நீங்கள் உங்களது வீட்டிற்கு அழைத்துச் செல்வதும், நான் ஒருவரை அழைத்துக் கொள்வதும் சிறந்ததில்லையா? எனக் கேட்டார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள், இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் இருவரும் இணைந்து அபூ தாலிப் அவர்களிடம் சென்றார்கள். அவர்களிடம் இந்த விண்ணப்பத்தை முன் வைத்தார்கள். அன்னார் தனது பிள்ளைகளில் அகீல் அவர்களை மிகவும் நேசித்தார்கள். அபூ தாலிப் அவர்களுக்கு அகீலுடன் மிகவும் அன்பு இருந்தது. எனவே அகீலை என்னிடம் விட்டு விடுங்கள். எஞ்சியவர்களில் நீங்கள் விரும்பியவர்களை அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள், ஜாஃபர் அவர்களை தனது வீட்டிற்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி அவர்களை தனது வீட்டிற்கும் அழைத்துச் சென்றார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் வயது அப்போது 6,7 ஆக இருந்தது. அதன் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நிரந்தரமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனேயே தங்கினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 111)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது தொடர்பாக இப்னு இஸ்ஹாக்கின் அறிவிப்பு இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் அவர்கள் ஹஸ்ரத் கதீஜா அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு அன்னாருடன் தொழ தொடங்கிய பிறகு ஒரு நாள் கழித்து வந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தொழுவதைக் கண்டார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அப்போது, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே! இது என்ன? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது அல்லாஹ்வின் மார்க்கமாகும். இதனை அல்லாஹ் தனக்காக தேர்ந்தெடுத்துக் கொண்டான். அத்துடன் நபிமார்களையும் அனுப்பியுள்ளான். எனவே நான் உங்களை அல்லாஹ்வின் பக்கமும், அவனை வணங்குவதன் பக்கமும், லாத் மற்றும் உஸ்ஸா போன்ற பொய் தெய்வங்களிலிருந்து விலகியிருப்பதன் பக்கமும் அழைக்கின்றேன் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், நான் இந்த விஷயத்தை இதற்கு முன் ஒருபோதும் கேட்டதில்லை. அபூ தாலிப் அவர்களிடம் இது பற்றி நான் பேசாத வரை என்னால் எதையும் கூற முடியாது என்று கூறினார்கள். நபித்துவ அறிவிப்பிற்கு முன்பாக இந்த இரகசியம் வெளிப்படுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. எனவே அலீயே! நீங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்றால் பின்னர் அதனை இரகசியமாக வையுங்கள் என்று கூறினார்கள்.

ஆக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இரவைக் கழித்தார்கள். பின்னர் அல்லாஹ் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உள்ளத்தில் இஸ்லாத்தை நுழையச் செய்து விட்டான். அடுத்த நாள் காலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அன்னார் வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் என்னிடம் என்ன விஷயத்தை எடுத்து வைத்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை; அவன் ஏகன்; அவனுக்கு எந்த இணையும் இல்லை என்று சாட்சியம் கூறுங்கள் என்றும், லாத் மற்றும் உஸ்ஸாவை நிராகரிக்கவும், அல்லாஹ்வுக்கு இணை வைப்பதிலிருந்து விலகி இருப்பதை வெளிப்படுத்துவதற்கும் உங்களை நான் அழைத்தேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களின் மீதான அச்சத்தின் காரணமாக மறைமுகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து சென்றார்கள். அன்னார் தனது இஸ்லாத்தை மறைமுகமாக வைத்துக் கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 88,89 அலி பின் அபீ தாலிப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் அங்கேயேதான் வசித்து வந்தார்கள். ஏனென்றால் அறிவிப்பில் அவ்வாறே உள்ளது. எவ்வாறிருப்பினும் அஸதுல் காபாவில் இந்த அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள்தான் முதன் முதலில் ஈமான் கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் வயது 13 ஆக இருந்தது. வேறு சில அறிவிப்புகளில் 15,16,18 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபதில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 200 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்கள், ஆண்களில் முதன் முதலில் ஈமான் கொண்டவர் யார்? ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களா? ஹஸ்ரத் அலி அவர்களா? ஹஸ்ரத் ஸைது அவர்களா? என்று விவாத்தித்துள்ளனர். சிறுவர்களில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும், பெரியவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், அடிமைகளில் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களும் முதலில் ஈமான் கொண்டதாக தீர்வை முன் வைக்கின்றனர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களும் தனது ஒரு கருத்தை முன் வைக்கின்றார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்குப் பிறகு ஆண்களில் முதன் முதலில் ஈமான் கொண்டவர்கள் தொடர்பாக வரலாற்று ஆசிரியர்களிடம் கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் ஹஸ்ரத் அபூபக்ர் அப்துல்லாஹ் பின் அபீ கஆஃபா என்று பெயரைக் குறிப்பிடுகின்றனர். சிலர் அலீ (ரலி) அவர்களின் பெயரையும் அப்போது அன்னாருக்கு வெறும் 10 வயதுதான் இருந்தது என்றும் கூறுகின்றனர். வேறு சிலரோ, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாகிய ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் பெயரைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் எம்மைப் பொருத்தவரை இந்த சண்டை வீணானதாகும்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தினராக இருந்தார்கள். அவர்கள் பிள்ளைகளைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தங்கி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாதம் செய்ததும் அவர்கள் நம்பிக்கை கொண்டது இன்னும் கூறப்போனால் வெளிப்படையான வாய்மொழி ஒப்புதலுக்கு எந்த தேவையும் இல்லாமல் இருந்தது. எனவே அவர்களின் பெயரை இடையில் கொண்டு வருவதற்கு எந்த அவசியமும் இல்லை. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதும், அவர்கள் ஈமான் கொண்டதும் எந்தவொரு வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. ஒரே விஷயம்தான். எந்தவொரு வாய்மொழி ஒப்புதலுக்கும் அவசியம் இருக்கவில்லை. எனவே அவர்களின் பெயரை இடையில் கொண்டு வருவதற்கு அவசியம் இல்லை. எஞ்சிய விஷயங்களைப் பொருத்தவரை அவர்களில் முதன் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் ஈமானிலும் அன்னார் உறுதியாக நிலை நின்றார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 121)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டியதால் ஓர் உதவியாளர் கிடைத்தார். ஆனால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மேன்மையைப் பாருங்கள். அன்னாருக்கு கேட்காமலேயே உதவியாளர் கிடைத்து விட்டார். இங்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிட விரும்புகின்றார்கள். மேலும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உதவியாளராக திகழ்ந்தார்கள் என்றும் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையைப் பாருங்கள். அன்னார் கேட்காமலேயே அன்னாருக்கு உதவியாளர் கிடைத்து விட்டார் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அதாவது எந்த மனைவியின் மீது அன்னார் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்களோ அந்த மனைவி அன்னார் மீது எல்லோரையும் விட முதலில் ஈமான் கொண்டார்கள். ஏனென்றால் ஒவ்வொரு நபரின் மார்க்கமும் கொள்கையும் சுதந்திரமானதாக இருக்கும். எவரும் யாரையும் பலந்தப்படுத்தி ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியாது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா அவர்களிடம் தனது முதல் வஹீயைப் பற்றி குறிப்பிட்டபோது அன்னார் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது. நான் சிந்தித்து புரிந்து முடிவெடுப்பேன் என்று கூறியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு கூறவில்லை. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் எந்த தயக்கமும், எந்த தாமதமுமின்றி அன்னாரின் நபித்துவ வாதத்தை ஒப்புக் கொண்டு அன்னாருக்கு ஆதரவு அளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தம்மீது ஈமான் கொள்ள மாட்டார்களோ என்ற கவலை நீங்கியது. முதன் முதலில் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களே ஈமான் கொண்டார்கள். அப்போது அல்லாஹ் அர்ஷில் அமர்ந்து கொண்டு, أَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ என்று கூறினான். அதாவது முஹம்மதே! ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மீது உமக்கு அன்பும், நேசமும் இருந்தது. மேலும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் உங்களை விட்டு விடுவார்களோ என்ற எண்ணமும் உமக்கு இருந்தது. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் என்மீது ஈமான் கொள்வார்களா? மாட்டார்களா? என்ற கவலையும் இருந்தது. நாம் உமது தேவைகளை முழுமை செய்தோமா? இல்லையா? என்று கூறிக் கொண்டிருந்தான்.

அதன் பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வீட்டில் அல்லாஹ்வின் புறமிருந்து இறங்குகின்ற வஹீ பற்றி பேசப்பட்டது. அப்போது அன்னாரின் வீட்டில் தங்கியிருந்த அடிமையாகிய ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸ் முன்னோக்கி சென்றார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் உங்கள் மீது நம்பிக்கை கொள்கிறேன் என்றார்கள். அதன் பிறகு 11 வயது சிறுவனாக இருந்த ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் வீட்டின் கதவருகே நின்று கொண்டு பேச்சுக்களை கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்குமிடையில் அந்த உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இறைவனின் தூதுச் செய்தி வந்துள்ளது என்பதை அவர் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவர் மிகவும் புத்திசாலியான மற்றும் நுட்பமான கருத்துடன் செயல்படக்கூடிய ஒரு சிறுவனாக இருந்தார். அவரிடம் நன்மைக்கான உணர்வுகள் இருந்தன. அந்த நன்மையின் உணர்வுகள் அவருக்கு உணர்வூட்டிக் கொண்டே இருந்தன. ஆனால் இன்னும் அது வளர்த்தெடுக்கப்பட வேண்டியதிருந்தது.

அன்னாரின் உணர்வுகள் மிகவும் உயர்ந்ததாக இருந்தன. ஆயினும் அன்று வரை அது உள்ளுக்குள்ளேயே அமுங்கி கிடந்தது. மேலும் அல்லாஹ் உண்மையை ஒப்புக்கொள்ளும் தன்மையை அவரிடம் விதைத்திருந்தான். ஆனால் அப்போது வரை சந்தர்ப்பமும் அவருக்கு கிடைக்கவில்லை. தனது உணர்வுகள் பொங்கி எழுவதற்கான நேரம் வந்து விட்டதை அன்னார் கண்டார்கள். மேலும் தமது உணர்வுகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற உணர்வும் தோன்றியது. இறைவன் தற்போது தன்னை அழைக்கின்றான் என்பதை சிறுவனாக இருந்த அந்த அலி (ரலி) அவர்கள் கண்டபோது தனது வேதனை நிறைந்த உள்ளத்துடனும், வெட்கத்துடனும் முன்னே சென்றார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது சிற்றண்ணை எதன் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்களோ, மேலும் எதன் மீது ஸைது நம்பிக்கை கொண்டுள்ளார்களோ அதன்மீது நானும் நம்பிக்கை கொள்கின்றேன் என்று கூறினார்கள். (ரஸூலே கரீம் (ஸல்) கி ஸிந்தகி கே தமாம் அஹம் வாகியாத்...., அன்வாருல் உலூம் தொகுதி 19 பக்கம் 127,128)

தாரீகே திப்ரியில் எழுதப்பட்டுள்ளது: தொழுகைக்கான நேரம் வரும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் வனாந்திரத்தின் பக்கம் சென்று விடுவார்கள். மேலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் அன்னாருடைய சிறிய தந்தை அபூ தாலிப் மற்றும் ஏனைய சிறிய தந்தையர்கள் மற்றும் முழு சமுதாயத்திலிருந்தும் மறைந்து அன்னாருடன் இணைந்து கொள்வார்கள். இருவரும் அங்கு தொழுது விட்டு மாலையில் வீடு திரும்புவார்கள். இந்த விஷயம் இவ்வாறே தொடர்ந்து கொண்டிருந்தது. பின்னர் ஒரு நாள் அபூ தாலிப் அவர்கள் இருவரும் தொழுது கொண்டிருப்பதை பார்த்து விட்டார்கள்.

அப்போது அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், எனது சகோதரனின் மகனே! நீங்கள் பின்பற்றி வருகின்ற இந்த மார்க்கம் என்ன மார்க்கம்?

EDITOR
Moulavai.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavai. ABDUR RAHMAN THAIR
Mobile : + 91 96774-14441
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 7 January 2021 Issue No. 1

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது சிறிய தந்தையே! இது அல்லாஹ்வின் மார்க்கமாகும். மேலும் அவனது மலக்குகளின் மார்க்கமாகும். மேலும் அவனது தூதரின் மார்க்கமாகும். மேலும் நமது தந்தை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கமாகும். அல்லது இதனை ஒத்த வேறு ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டார்கள். அல்லாஹ் என்னை இத்துடன் மக்களிடம் அனுப்பி வைத்துள்ளான். சிறிய தந்தையே! நான் உமக்கு அறிவுரை செய்வதற்கும், உம்மை நேர்வழியின் பக்கம் அழைப்பதற்கும் நீர் மிகவும் உரிமை படைத்தவர் ஆவீர். நீர் என்னை ஏற்றுக் கொண்டு எனக்கு உதவி செய்ய வேண்டும். அல்லது அதுபோன்ற ஒரு விஷயத்தை அன்னார் கூறினார்கள்.

அப்போது அபூ தாலிப் அவர்கள், எனது அண்ணன் மகனே! எனது தந்தை, எனது மூதாதையர்கள் ஆகியோரை நான் எந்த மார்க்கத்தில் கண்டேனோ அதனை கைவிடுவதற்கு எனக்கு வலிமை இல்லை. ஆனால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உயிருடன் இருக்கும் வரை நீர் விரும்பாத எந்த விஷயமும் உம்மை வந்தடையாது. (தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 225 – 2002 ஆம் ஆண்டு தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மக்காவின் ஒரு மைதானத்தில் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்கள் அங்கு கடந்து சென்றார்கள். அப்போது வரை ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எதுவும் தெரியாது. அவர்கள் அங்கு நின்று கொண்டு மிகவும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுகையை நிறைவு செய்ததும், இது என்ன மார்க்கம்? எதனை நீங்கள் பின்பற்றுகின்றீர்கள்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது இறை மார்க்கமும், இப்ராஹீமின் மார்க்கமும் ஆகும் என்று கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ தாலிப் அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் சுருக்கமாக அழைப்பு கொடுத்தார்கள். ஆனால் எனது தந்தை மற்றும் பாட்டனாரின் மார்க்கத்தை கைவிட முடியாது என்று கூறி அபூ தாலிப் ஏற்க மறுத்து விட்டார்கள். ஆனால் அத்துடன் தனது மகன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை நோக்கி, மகனே! நீ நிச்சயம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஏனென்றால் அவர் உம்மை நன்மையைத் தவிர்த்து வேறு எதன் பக்கமும் அழைக்க மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று கூறினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 127)

அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது உறவினர்களை எச்சரிப்பது தொடர்பான குறிப்பு ஓரிடத்தில் இவ்வாறு கிடைக்கின்றது. ஹஸ்ரத் தர்ரா பின் ஆஸிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

وَأَنْذِرْ عَشِيرَتَكَ الْأَقْرَبِينَ இந்த வசனம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறங்கியது. அதாவது நீர் உமது குடும்பத்தினரை, உறவினர்களை எச்சரிப்பீராக என்பது அதன் பொருளாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அலீயே! எமக்காக ஒரு சாஹ் உணவை தயார் செய்யும். அத்துடன் ஆட்டின் தொடைக் கறியை தயார் செய்யும் என்று கூறினாார்கள்.

மற்றொரு அறிவிப்பில் சாஹ் என்பதற்கு பகரமாக மத்தா என்ற சொல்லும் இடம் பெற்றுள்ளது. ஒரு சாஹ் என்பது 4 மத்தை கொண்டதாகும். அதாவது குறைந்தபட்சம் இரண்டரை சேர் அல்லது இரண்டரை கிலோ எடை கொண்டதாக இருக்கும் என்று கூறுகின்றனர்.

கூஃபாவாசிகள் மற்றும் ஈராக்கியர்களைப் பொருத்தவரை ஒரு சாஹ் 8 மத்தைக் கொண்டதாகும். அதாவது நான்கு சேர் அல்லது நாலரை சேர் அளவு கொண்டதாகும். ஆனால் எவ்வாறிருப்பினும் மிகவும் குறைந்த அளவில் எடுத்துக் கொண்டாலும் இரண்டரை சேர் அல்லது நான்கு சேர் இருக்கும். குடும்பத்தின் உறுப்பினர்களை அழைத்து விருந்து வழங்க இருந்தார்கள். அதற்காக உணவும் தயாரிக்க வேண்டியதிருந்தது. எமக்காக ஒரு பெரிய பால் பாத்திரத்தை தயார் செய்யவும். பின்னர் பனூ அப்துல் முத்தலிப் கோத்திரத்தாரை ஒன்று கூட்டவும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே நான் அவ்வாறே செய்தேன். அவர்கள் அனைவரும் ஒன்று கூடினர். அவர்கள் நாற்பது நபர்களாக இருந்தனர் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு நபர் கூடுதலாகவோ, குறைவாகவேலா இருந்தார். அதில் அன்னாரின் சிறிய தந்தையான அபூ தாலிப், ஹம்ஸா மற்றும் அப்பாஸ் மற்றும் அபூ லஹப் ஆகியோரும் அடங்குவர். நான் அவர்களுக்கு முன்னால் உணவிற்கான ஒரு பெரிய பாத்திரத்தை வைத்தேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிலிருந்து இறைச்சியின் ஒரு துண்டை எடுத்துக் கொண்டார்கள். மேலும் தனது பற்களால் அதை கடித்தார்கள். மேலும் அந்த பாத்திரத்தின் எல்லா புறமும் இறைச்சியை பரக்கத் ஏற்படும் விதமாக தூவினார்கள். மேலும் அல்லாஹ்வின் பெயரை நினைவு கூறி உண்ணுங்கள் என்று கூறினார்கள். எனவே மக்கள் உண்டனர். எந்த அளவுக்கென்றால் அவர்கள் திருப்தி அடைந்தனர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவர்கள் முன் வைத்ததை ஒரே ஒரு நபர் மட்டுமே உண்டிருக்க முடியும். பின்னர் அன்னார், மக்களுக்கு பருகக் கொடுங்கள் என்று கூறினார்கள். எனவே நான் பால் பாத்திரத்தை கொண்டு வந்தேன். அவர்கள் அனைவரும் திருப்தியடைந்து விட்டனர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவர்கள் அனைனவருக்கும் பருகுவதற்காக கொடுத்ததை ஒரு நபர் மட்டுமே பருகியிருக்க முடியும்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கூட்டத்தினரிடம் பேச வேண்டும் என்று எண்ணம் கொண்டார்கள். அப்போது உடனே அபூ லஹப் பேசத் தொடங்கி விட்டான். உங்களது தோழர் உங்கள் மீது என்ன மந்திரம் செய்து விட்டார்? என்று கேட்டான். பின்னர் அங்கிருந்து மக்கள் கலைந்து சென்று விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அவர்களிடம் எதுவும் பேச முடியவில்லை. அடுத்த நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அலியே! எந்த உணவையும், பானத்தையும் நேற்று நீர் தயார் செய்தீரோ அதேபோன்றே மீண்டும் தயார் செய்யுங்கள். எனவே நானும் அவ்வாறே செய்தேன். நான் மக்களை ஒன்று கூட்டினேன். நேற்று செய்ததுபோன்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் செய்தார்கள். அதாவது உணவில் பரக்கத் ஏற்பட்டது. பின்னர் மக்கள் உண்டார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்கள் திருப்தியடைந்தனர். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பனூ அபூ அப்துல் முத்தலிபே! நான் உங்களுக்கு கொண்டு வந்ததை விட சிறந்த ஒன்றை தனது சமுதாயத்திற்காக கொண்டு வந்த எந்த இளைஞரையும் நான் கண்டதில்லை. நான் உங்களிடத்தில் உலகம் மற்றும் மறுமையின் விவகாரத்தை எடுத்துக் கொண்டு வந்துள்ளேன் இந்த விவகாரத்தில் எனக்கு யார் உதவி செய்வார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது மக்கள் அனைவரும் மௌனமாக இருந்தார்கள். நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் இவர்கள் அனைவரை விடவும் வயதில் மிகவும் குறைந்தவன் ஆவேன். நான் தங்களுக்கு உதவியாளனாக இருப்பேன் என்று கூறினார்கள். (லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 2 பக்கம் 648)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் இந்த விஷயத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு இவ்வாறு வழிகாட்டினார்கள். ஒரு விருந்திற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள். அதில் பனூ அப்துல் முத்தலிப் அவர்களின் குடும்பத்தினரை அழையுங்கள். ஏனென்றால் இதன் மூலம் அவர்களுக்கு உண்மையான தூதுச் செய்தி சென்றடையட்டுமாக. எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் விருந்திற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது அனைத்து விருந்தினர்களையும் அந்த விருந்திற்கு அழைத்தார்கள். ஏறக்குறைய அப்போது 40 நபர்கள் பங்கு பெற்றிருந்தனர். அனைவரும் உணவு உண்டு விட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில கருத்துக்களை எடுத்துக்கூற தொடங்கினார்கள். ஆனால் துர்பாக்கியசாலியான அபூ லஹப் எப்படிப்பட்ட விஷயங்களை பேசினான் என்றால் அதனைக்கேட்டு மக்கள் அனைவரும் கலைந்து சென்று விட்டனர்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த சந்தர்ப்பம் கைநழுவிவிட்டது. இப்போது நீங்கள் மீண்டும் ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார்கள். எனவே அன்னாரின் உறவினர்கள் மீண்டும் ஒன்று கூடினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை நோக்கி, பனூ அப்துல் முத்தலிபே! பாருங்கள். எந்த நபரும் தமது கோத்திரத்தாருக்கு கொண்டு வந்திராத சிறந்த விஷயத்தை நான் உங்களிடம் கொண்டு வநந்துள்ளேன். நான் உங்களை இறைவன் பக்கம் அழைக்கிறேன். நீங்கள் எனது விஷயத்தை

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad